**The Book of Matthew**
Booklet - 1
Tamil

© IBL
2003

Printed by :

For additional booklets write to :

**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

# ஆதியாகமம், யாத்திராகமம்

புத்தகம் -1

## பத்துக் கற்பனைகள்

# அறிமுகம்

மினி வேதாகமம் கல்லூரிக்கு உங்களை வரவேற்கிறோம். அடுத்த 32 புத்தங்களிலும் உள்ள பாடத் தொடரில் நாம் வேதாகமத்தைத் துவக்கமுதல் இறுதிவரை ஆய்வு செய்வோம். இதைப் புரிந்து கொள்வதற்கான நம்முடைய பயணம், நம்மை ஆதியாகமம் துவங்கி வெளிப்படுத்தல் வழியாகக் கொண்டு செல்லும். வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் அளிக்கும் விரிவான படத்தையும, அதன் முக்கியமான குறிப்புகளையும் அவற்றை நடைமுறைப்படுத்தும் வழிகளையும் பார்ப்போம்.

சில சமயங்களில், வேதாகமத்தில் நாம் வாசிப்பது குழப்பமாகத் தெரியலாம். எப்போது என்ன நடந்தது என்றும், யார் யாருக்கு உறவினர் என்றும், இவைகளுக்கெல்லாம் என்ன பொருள். என்பதையும் தெரிந்து, விளங்கிக் கொள்ளுவது கடினம் தான். ஆனால் வேதாகமத்தின் ஒவ்வொரு வசனமும், ஒரு புதிரின் சிறிய பகுதியாக, மேன்மையாக, முழுமையாக இணைகின்றன. நாம் ஒன்றாகச் செல்லும் பயணத்தின் முடிவில், வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியும் எப்படி ஒன்றாக இணைகிறது என்று அறிந்து கொள்ள வேண்டுமென்பதே என் விண்ணப்பமாயிருக்கிறது. வேதாகமத்தின் எல்லாப் புத்தகங்களையும் பார்வையிட்டபின், ஒவ்வொன்றையும் பற்றிய ஒரு கற்பனையைக் கொண்டு வந்து அவைகளை தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள வரலாற்று சந்தர்ப்பத்தோடு உங்களால் பொருத்த முடியும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் எப்படிக் கிரியை செய்தார் என்று நீங்கள் காண்பீர்கள். கிறிஸ்துவின் வருகையால் எது மாற்றமடைந்தது, எதற்காக மாற்றமடைந்தது என்றும் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். உங்கள் இருதயத்தில் நீங்கள் விசுவாசித்தது உங்கள் மனதில் நிலைநாட்டப்பட்டு, ஒரு புதிய நம்பிக்கையும், உங்கள் விசுவாசத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் ஒரு திறமையையும் அனுபவிப்பீர்கள்.

இந்த ஆய்வு முழுவதிலும் நீங்கள் எங்களோடு இருக்கத் தீர்மானிப்பீர்கள் என்றும், உலகத்தின் மிகவும் முக்கியமான புத்தகமான வேதாகமத்தைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளும்போது

மற்றவர்களும் நம்மோடு சேர்ந்துகொள்ளுவதற்கு ஊக்கப்படுத்துவீர்களென்றும் நான் நம்புகிறேன். பிரயாணத்திற்குத் தயார் செய்து வாகனத்தில் ஏறுங்கள், ஏனெனில் நாம் ஆரம்பிக்கப் போகிறோம்.

## பணிக்கான உபகரணங்கள்

வேதாகமத்தை மெய்யாகவே புரிந்து கொள்ளவதற்கு ஒரே வழி அதை அப்பியாசிப்பதே. வேதாகம ஆய்வின் இந்தத் துவக்கத்தில் நீங்கள் முழு இருதயத்தோடும் உங்களை அர்ப்பணிக்கும்படி உங்களை ஊக்குவிக்கிறேன். இதைவிட அதிகமாக படிக்கத் தகுதியானதும், ஆர்வம் கொள்ள வேண்டியதும், நல்ல தீர்மானத் துடன் ஆய்வு செய்யப்படக்கூடியதுமான புத்தகம் எதுவும் இல்லை! இந்த புத்தகத்திலுள்ளதையும் விட இன்னும் ஆழ்ந்து ஆய்வுசெய்ய நீங்கள் விரும்பினால், வேதாகமத்தினுள் இன்னும் ஆழ்ந்து செல்லத் திறனளிக்கும் மற்ற உபகரணங்களைக் கண்டுபிடியுங்கள்.

ஆர்வத்தோடு இருப்பதோடுகூட, இந்த ஆய்வுக்குள் அலசிப் பார்க்க உதவி செய்யும் சில உபகரணங்களும் இருக்கின்றன. முதலாவதாக, உங்கள் கையில் ஒரு வேதாகமம் இருப்பது அவசியம். முடிந்தால் ஒன்றுக்கு மதிகமான மொழிபெயர்ப்புகளையும் பிரதிகளை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நோட்டுப் புத்தகமும், ஒரு பேனாவும் நிச்சயமாக அவசியப்படும்.

நாங்கள் பட்டியலிட்ட ஆதாரப் புத்தகங்களை சேர்த்து வைப்பது உங்கள் குறிக்கோளாக இருக்கட்டும். அப்படிச் செய்யும்போது காணும் வித்தியாசம் உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.



**அத்தியாயம் - 1**

# வேதாகமமும் அதன் அமைப்பும்

## அதன் அர்த்தமும் ஆரம்பமும்

வேதாகமத்தின் தனித்தனி புத்தகங்களை ஆய்வு செய்யத் துவங்குமுன், வேதாகமத்தை முழுமையாக நாம் பார்ப்போம். அது ஏன் அப்படி அழைக்கப்படுகிறது அடிக்கடி அது ஏன் ‘‘பரிசுத்த வேதாகமம்’’ என்று குறிப்பிடப்படுகிறது?

‘‘பைபிள்’’ என்ற சொல், லத்தீன் மொழியில் ‘‘புத்தகங்கள்’’ என்ற வார்த்தை பன்மையைக் குறிப்பிடும் ‘‘பிப்ளிக்கா’’ என்ற சொல்லிலிருந்து வந்தது. எனவே பைப்பிள் என்பது புத்தகங்களின் ஒரு தொகுப்பாகும் – சரியாகச் சொன்னால் அறுபத்தாறு புத்தங்கள் அடங்கியது. ‘பரிசுத்த’ என்பது. தேவனுக்குச் சொந்தமானது’’ அல்லது ‘‘தேவனிடமிருந்து வந்தது’’என்ற பொருளுடையது. எனவே பரிசுத்த வேதாகமம் என்பது ‘‘தேவனிடமிருந்து வந்த பரிசுத்த சிறிய புத்தகங்கள்’’ அல்லது ‘‘தேவனுக்குச் சொந்தமானதும் அவரிடமிருந்து வருவதுமான புத்தங்களின் தொகுப்பு’’ ஆகும்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்றும் குறிப்பிடப் படுகிறது ஏன்? பேதுரு, பவுல் போன்ற அப்போஸ்தலர்கள் கூறியவற்றிலிருந்து நாம் அவ்வாறு கூறுகிறோம். 2 தீமோத்தேயு 3:16–17 வசனங்கள் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். ‘‘வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியானாவரால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறியவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுவதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது’’.

வேதாகமம் தேவனைப்பற்றி மனிதர்களால் எழுதப்பட்ட ஒரு புத்தகத்தொகுதி மட்டுமே அல்ல என்று மேலும் மேலும் நாங்கள் உறுதியளிக்கிறோம். மாறாக, அது தேவன் தாமே கூறிய வார்த்தைகளை, 1500–1600 ஆண்டுக்கும் மேலான காலவரையில் மனிதர்

களால் (ஒருவேளை நாற்பது அல்லது அதற்கும் மேற்பட்ட வர்களால்) எழுதப்பட்ட செய்திகளைக் கொண்டது. தேவன் அசைவாடி இந்த மனிதர்கள் புத்தகங்களை எழுதச் செய்த முறைமை 'ஏவுதல்' என்றழைக்கப்பட்டது. சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்கப்பட்ட இதன் பொருள் ''சுவாசிப்பது'' என்பதாகும். 2 பேதுரு 2:21-இல் பேதுரு இவ்விதமாக விவரிக்கிறார்.

''தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்''.

''ஏவப்பட்டு'' என்ற கிரேக்க பதம் ''Carried''ஒரு அழகிய வடிவத்தைக் கொடுக்கிறது. அந்த வார்த்தை ''பேரோ'' ''Phero'' ஆகும். இதிலிருந்து ''ferry'' என்ற வார்த்தை நமக்குக் கிடைக்கிறது. அதாவது, படகின் மூலம் எடுத்துச் செல்லுதல் என்ற அர்த்த முடையது. ஒரு படகில் உட்கார்ந்து நீரோட்டத்தினால் அது இழுத்துச் செல்லப்படுவதை அல்லது பாய்களின் மீது காற்றடித்து அதனால் மிதந்து செல்லுவதைக் கற்பனை செய்து பாருங்கள். இங்கே பேதுரு அளித்த ஏவுதல் என்ற வார்த்தையின் கருத்து உங்களுக்குக் கிடைக்கும்.

## அதன் அமைப்பு

வேதாகமம் என்றால் என்ன என்று நிலைநாட்டியபின், அது எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்ப்போம். நீங்கள் எதிர்பார்ப்பது போல் இல்லாமல், புத்தகங்கள் காலக்கிரம வரிசை யிலோ அல்லது எழுதியவர்களால் தொகுக்கப்பட்டது போலவோ காணப்படவில்லை. மாறாக, அவைகள் எந்த வகையைச் சார்ந்தது என்பதையும் செய்தியையும் கருத்தில் கொண்டு அமைக்கப் பட்டிருக்கின்றன. சில காரணங்களினால், எல்லாம் இப்படி அமைக்கப் படவில்லை. எடுத்துக்காட்டாக, இயேசுவானவரின் காலத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று எதுவுமேயில்லை. புதிய ஏற்பாடு இன்னும் எழுதப்படவில்லை, எனவே இயேசுவானவருடைய காலத்தில் இருந்த புத்தகங்கள், ''தேவனுடைய வார்த்தை'' அல்லது ''வேதவாக்கியங்கள்'' என்று மட்டுமே அழைக்கப்பட்டன. புதிய



ஏற்பாடு எழுதப்பட்டு, புத்தகங்களின் ஒரு தொகுப்பாகக் கொண்டு வரப்பட்டப் பின்னரே பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளிடையே ஒரு வித்தியாசம் ஏற்படுத்தப்பட்டது.

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் முக்கியமான அடிப்படைச் செய்தி இயேசு வருகிறார் என்பதாகும். ஆரம்பத்தில் வேதவாக் கியங்களின்படி, தேவனும் மனிதனும் ஒருவரோடொருவர் இசைந் திருந்தனர். ஆனாலும் தேவன் மனிதனை, தானே தெரிந்தெடுத்துக் கொள்ளும் தகுதியுடன் பொறுப்புடைய ஒரு ஜீவியாக உருவாக் கினார். எனினும் மனிதன் தேவனைவிட்டு விலகிப்போவதைத் தெரிந்து கொண்டான். தேவனால் கலகம் விளைவிப்பதைச் சகித்துக் கொள்ள (பாவம்) முடியாது என்பதால், தேவன் மனிதனை விட்டு விலகினார். இப்படியாக தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஒரு ''பிரிவினை'' உண்டானது. தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உண்டான வேதவாக்கியங்கள், அடிப்படையில் இந்தப் பிரிவினைப் பற்றியே கூறுகிறது.

பழைய ஏற்பாட்டில், தேவன், ''அந்தப் பிரிவினையைப் பற்றி நான் ஒரு காரியத்தைச் செய்யப்போகிறேன் என்று நான் சொல்லும் போது நீ என்னை விசுவாசிப்பாயா?'' என்று நம்மிடம் கேட்கிறார். புதிய ஏற்பாட்டில், தேவன், ''அந்தப் பிரிவினையைப் பற்றி ஒரு காரியத்தை நான் செய்துவிட்டேன் என்று நான் சொல்லும்போது நீ என்னை விசுவாசிக்கிறாயா? என்று நம்மிடம் கேட்கிறார். பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் இயேசு வருகிறார் என்று சொல்லுவதையும், அவர் தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையேயுள்ள பிரிவினையை சரிப்படுத்தப் போகிறார் என்று சொல்லுவதையும் பாருங்கள். புதிய ஏற்பாடு இந்த நற்செய்தியை நமக்குச் சொல்லுகிறது. இயேசு வந்தார், இயேசு வந்தபொழுது அவர் தேவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள பிரிவினையைச் சரிகட்டினார்.

பழைய, புதிய ஏற்பாடுகளின் பெரிய பிரிவுகளுடன், ஒவ்வொரு ஏற்பாட்டுக்குள்ளும் இன்னும் பிரிவுகள் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் ஐந்து வேறுபட்டத் தலைப்பின்கீழ் வருகின்றன.

முதலாவது, பிரமாணங்களைப் பற்றிய ஐந்து புத்தகங்கள். இந்தப் புத்தகங்களில், தேவன் நமக்கு எது சரி, எது தவறு என்று சொல்லி, நீதிக்கான தம்முடைய தரத்தைக் கொடுக்கிறார்.

அடுத்து வருவன, பத்து வரலாற்றுப் புத்தகங்கள். முக்கியமாக இவைகள் தேவனுடைய மக்கள் சிலநேரங்களில் அந்தப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்தார்கள் என்றும், சில நேரங்களில் அவர்கள் கீழ்ப்படியவில்லை என்றும் சொல்லுகின்றன. அவர்களுடைய வரலாறுகள் நமக்கு எடுத்துக் காட்டுகளாகவும், எச்சரிக்கைகளாகவும் விளங்குகின்றன. வேதாகமத்தில் எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவுகள் முழுவதுக்குமான பிரதான வசனம், புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. வேதாகமத்தில் மக்களுக்கு நடைபெற்ற எல்லாக் காரியங்களும் எடுத்துக்காட்டுகளும் எச்சரிக்கை அளிப்பவை என்று பவுல் சொல்லுகிறார். அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது, அவைகள் நமக்கு எடுத்துக்காட்டுகள். அவர்கள் தங்கள் கருத்துப்படிச் செய்யும் பொழுது எச்சரிக்கைகளாகின்றன.

வரலாற்றுப் புத்தகங்களைத் தொடர்ந்து வருவது கவிதைப் புத்தங்கள். கவிதைப் புத்தங்களில் அவருடைய மக்கள் தேவனுடைய வசனங்களுக்கு ஏற்றுவாறு வாழும்போது, தேவன் அவர்களுடைய இருதயங்களில் பேசுகிறார். எடுத்துக்காட்டாக, யோபுவின் புத்தகம் தேவனுடைய மக்கள் மனக்காயமடையும் போது அவர்களுடைய இருதயங்களினுள் பேசுகிறது. சங்கீதப் புத்தகம், அவர்கள் ஆராதனை செய்யும் போது, அவர்களுடைய இருதயங்களினுள் பேசுகிறது. நீதிமொழிகள் புத்தகம், மக்களுக்கு வியாபாரத்திலும், பிறருடன் உறவுகொள்ளுவதற்கும் வேண்டிய ஞானத்தை அவர்கள் இருதயங்களில் கொடுக்கிறது. சாலொமோனின் உன்னதப்பாட்டு அவர்கள் நேசவசப்படும்போது அவர்களுடைய இருதயங்களில் பேசுகிறது. இந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றும் விசுவாசிகள் நடைமுறைப் படுத்துவதற்கு உதவியையும், ஊக்கமளித்தலையும் கொடுக்கிறது.

பழைய ஏற்பாட்டின் அடுத்த பகுதி மிகப் பெரியது. அது தீர்க்கத்தரிசிகள் என்றழைக்கப்படுகிறது. இந்தப் பகுதி இன்னும் பெரிய தீர்க்கதரிசிகள், சிறிய தீர்க்கதரிசிகள் என்று பிரிக்கப்



பட்டிருக்கிறது. இவை அவற்றிலுள்ள செய்தி முக்கியத்துவத்தைக் கொண்டல்ல, அவைகளின் நீளத்தின் அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டுள்ளது. பெரிய தீர்க்கதரிசிகள் தாங்கள் கூற வேண்டியதைக் கூற அதிக நீண்டப்பகுதியை எடுத்துக் கொள்ளுகின்றனர்!

புதிய ஏற்பாட்டிலும் ஐந்து வகையானப் புத்தகங்கள் இருக்கின்றன. முதலாவதாக இயேசுவைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் (இவைகள் சுவிசேஷங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன) புத்தகங்கள் நான்கு. இவை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோரால் எழுதப்பட்டவை. அடுத்து ஒரு வரலாற்றுப் புத்தகம், அப்போஸ்தலரின் நடபடிகள். இதன்பின் நிருபங்கள் அல்லது கடிதங்கள் எனப்படுபவை. அவைகள் இரண்டு வகையிலானவை. பவுலின் நிருபங்கள், பொதுவான நிருபஙகள். புதிய ஏற்பாட்டின் பாதிப்பகுதி, உயிர்த்தெழுதலுக்குப்பின் நிறுவப்பட்ட அனுபவமற்ற சபைகளுக்கு அப்போஸ்தலர் பவுலால் எழுதப்பட்டவை. இதர கடிதங்கள் பலதரப்பட்ட மக்களால் எழுதப்பட்டவை. கடைசியாக, வெளிப் படுத்தின விசேஷம் என்ற தீர்க்கதரிசனப் புத்தகம் உள்ளது.

நாம் வேதாகமத்தை ஆய்வு செய்யும் பொழுது, பழைய ஏற்பாட்டின் அடிப்படைச் செய்தி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம். பழைய ஏற்பாடு முழுவதும் இயேசு வருகிறார் என்ற உண்மையைப் பற்றியதே. இந்தச் செய்தியை நோக்கிப் புதிய ஏற்பாட்டுக்கு வருகிறோம். புதிய ஏற்பாடு முழுவதும் இயேசு வந்தார் என்பதைப் பற்றியது.

## அத்தியாயம் 2

## வேதாகமமும், அதன் நோக்கமும், எழுதியவர் மற்றும் ஆதாரங்கள்

### அதன் நோக்கம்

ஆதியாகமம் துவங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை, வேதாகமம் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவைப் பற்றியது.

வேதாகமம் நாகரீகத்தின் வரலாறோ அல்லது படைப்பைப் பற்றிய ஒரு விஞ்ஞான பாடப் புத்தகமோ அல்ல. வேதாகமம், அடிப்படையில் நல்ல சன்மார்க்க நெறியில் வாழ்வதற்கான ஒரு கைப்புத்தகம் என்று சிலர் நினைக்கிறார்கள். அநேகர் இயேசுவானவர் ஒரு போதகராகவும், இந்த வாழ்க்கை முறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக மட்டுமே இருந்தார் என யோசிக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவே வேதாகமத்தின் மையக்கருத்து. இந்தக் கருத்தை ஆதரித்து, வேதாகமத்தில் நான்கு நோக்கங்கள் இருக்கின்றன. முதலாவது நோக்கம், இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்தின் இரட்சகராகவும், மீட்பராகவும் அளிப்பது. இப்பொழுது இந்த முதல் நோக்கத்தை நாம் புரிந்துகொள்ள ஒரு இரட்சகர் ஏன் அவசியப்படுகிறார் என்று தெரிந்து கொள்ள வேண்டும். வேதாகமத்தின் இரண்டாம் நோக்கம், இயேசு வந்த வரலாற்றுப் பின்னணியை அளிப்பதாகும்.

ஆனால் ஆதியாகமம் 12-இல் இந்த வரலாறு மெதுவாக கீழே இறங்குகிறது. இந்த அத்தியாயத்திலிருந்து வெளிப்படுத்திய விசேஷம் வரை - எஞ்சியிருக்கும் 1,178 அத்தியாயங்களிலும் - கதைத் திட்டம் குறுகி வருகிறது. வேதாகமத்தின் வரலாறு ஆபிரகாமையும் அவன் சந்ததியாரைப் பற்றியதாயும் இருக்கிறது. குறிப்பாக அவர் சந்ததியில் வந்த மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக பூமியின் தேசங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டதையும் கூறுகிறது.

முதல் இரண்டு நோக்கங்களையும் நாம் தெரிந்து கொண்டதும், அடுத்த இரண்டும் தெளிவாய்த் தெரிகின்றன. மூன்றாவது நோக்கம், அவிசுவாசியை விசுவாசத்தினுள் வழிநடத்தவது நான்காவது ஒரு விசுவாசி எப்படி வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை அவனுக்குக் காட்டுவது.

**அதை எழுதியவர்கள்**

வேதாகமத்தின் புத்தகங்களை எழுதியது யார்? எப்பொழுது? எங்கே? எந்த மொழியில் அல்லது மொழிகளில்? அதன் பூர்வீகக் கையெழுத்துப் பிரதிகளில் ஏதாவது இப்பொழுது இருக்கிறதா?



வேதாகமத்தில் எதைச் சேர்க்க வேண்டுமென்றும், இன்று அது இருக்கும் ஒழுங்கையும் தீர்மானித்தது யார்? வேதத்தைப் படிக்க ஆரம்பித்ததுமே இப்படிப்பட்ட கேள்விகள் உங்கள் மனதில் எழும்பும்.

முதலாவதாக, வேதாகமத்தை எழுதியவர்கள் யார் என்று பார்ப்போம். மனிதர்களின் பேனாக்களின் மூலமாக தேவன் அதை எழுதினார் என்று முன்னால் நாம் கூறினோம். (அந்த மனிதர்கள் யார் என்பதைப் பற்றி பின்னர் நாம் பேசுவோம்).

தேவன் இந்தப் புத்தகங்களை எழுதினார் என்பதைப் பற்றி நாம் பேசும்போது நாம் புரிந்துகொள்ள வேண்டிய இரண்டு பிரத்தியேக மான (உபயோகிக்கப்படும்) வார்த்தைகள் இருக்கின்றன. அவற்றில் முதலாவது வெளிப்படுத்துதல் என்ற சொல். வெளிப் படுத்துதல் என்பது தேவன் சத்தியத்தை மனிதனுக்கு இயற்கையின் மூலமாக, பரிசுத்த ஆவியானவரின் வழியாக, தீர்க்கதரிசிகள் வாயிலாக இன்னும் அநேக வழிகளில் வெளிப்படுத்தும் எல்லா வழிகளையும் அடக்கி யுள்ளது. இதை இறையியல் வல்லுநர் ''சிறப்பு வெளிப்படுத்தல்'' என்று குறிப்பிடுகின்றனர். வேதாகமம் தேவனுடைய சிறப்பு வெளிப்படுத்துதல். அதற்கு ஒரு ஆரம்பம் இருக்கிறது. அதற்கு ஒரு முடிவு இருக்கிறது. ஏறக்குறைய ஆயிரத்து அறுநூறு ஆண்டு காலவரையில், இந்தப் புத்தகங்களை எழுதும்படித் தேவன் மனிதர்களை இயக்கினார். ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி வார்த்தைகள் எழுதப்பட்டதும், சிறப்பு வெளிப்படுத்துதல் முடிவடைந்தது. இதற்குப்பின் சிறப்பு வெளிப் படுத்துதல் அல்லது அந்த வகையான ஏவப்படுதல் நடை பெறவில்லை.

இப்பொழுது, வேதாகமத்தின் புத்தகங்களைத் தேவன் எழுதினார் என்று நிலைநாட்டிய பின், மனிதர்கள் இந்தப் புத்தகங்களை எழுதினார்கள் என்றும் நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த மனிதர்கள் ராஜாக்கள், மீன்பிடிப்பவர்கள், மேய்ப்பர்கள், தளபதிகள் (generals), ஆசாரியர்கள், ஒரு அத்திப்பழம் சேகரிப்பவர் ஆகியோராகும். ஒருவர் ஒரு வைத்தியர்; ஒருவர் ஒரு ஆயக்காரன்; இவர்கள் பல்வேறு வகையைச் சார்ந்த மனிதர்கள்.

**அதன் துவக்கம்**

யாரால், எப்பொழுது, எங்கு எழுதப்பட்டவைகள் வேதாகமத்தில் இடம் பெற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது? அந்தத் தீர்மானங்கள் எப்பொழுது எடுக்கப்பட்டன?

வேதாகமம் முன்னூறு அல்லது நானூறு ஆண்டுகள் பலராலும் வாசிக்கப்பட்டிருந்தாலும், கி.பி. 100-ஆம் ஆண்டினருகில் ஜம்னியா கவுன்சிலில் பழைய ஏற்பாடு அதிகாரப் பூர்வமாகத் தேர்ந்தெடுத்து தொகுக்கப்பட்டது. அவைகளின் மனித எழுத்தாளர்கள். ஒரு தீர்க்கதரிசியாக அல்லது நல்ல எழுத்தாளாராக அல்லது நன் மதிப்பு உடையவர்களாக இருந்தததன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவைகளில் பெரும்பான்மையானப் புத்தகங்கள் எபிரெய மொழியில் எழுதப்பட்டவை.

பெரும்பாலும் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தங்கள் ஏறக்குறைய கி.பி. 692-இல் துருல்லான் கவுன்சிலில் தேர்ந்தெடுத்துக் தொகுக்கப்பட்டன. இந்தப் புத்தகங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்டதை (Canonization) புனிதப்படுத்துதல் என்று கூறினர். இது மூன்று திட்டமான ரீதியில் தெரிந்தெடுக்கப்பட்டது.

1. அந்தப் புத்தகம் அப்போஸ்தலரால் அல்லது ஒரு அப்போஸ்தலரோடு நெருங்கிய தொடர்புடையவரால் எழுதப்பட்டதா?
2. விசுவாசிக்கு கிருபை அளிக்கத்தக்கதாக அந்தப் புத்தக்கத்தில் ஆவிக்குரியதும், தியானத்துக்குரியதுமான பொருளடக்கம் காணப்பட்டதா?
3. இந்தப் புத்தகத்திலுள்ள பொருள், இதர, ஏவப்பட்டப் புத்தகப் பொருளோடு ஒத்துப் போவதாயிருக்கிறதா, இந்தப் புத்தகத்தின் ஏவுதலைப்பற்றி சபைகளுக்குள் ஏகமனதான அபிப்பிராயம் இருக்கிறதா?

நீண்ட காலத்துக்கு முன் எழுதப்பட்டப் புத்தகங்கள் எப்படி இன்னும் கிடைக்கின்றன? அவைகள் மிகவும் கவனமாகப்



பாதுகாக்கப்பட்டன. நிச்சயமாக கைப்பிரதிகளின் அசல் எதுவும் நம்மிடமில்லை. காகிதம் நீண்டகாலம் நிலைப்பதில்லை. எனினும் நம்மிடம் மிகச் சிறந்த பிரதிகள் இருக்கின்றன. இந்த ஆவணங்களை நவீன மொழிகளில் மொழிபெயர்ப்பதில் அதிகக் கவனம் எடுக்கப் பட்டுள்ளது.

**முடிவாக**

வேதாகமம் எப்படி தேவனால் ஏவப்பட்டப் புத்தகம் என்று உண்மையாக நமக்குத் தெரியும்? சரியான புத்தகங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டன. பிரதிகளில் அல்லது மொழிபெயர்ப்புகளில் எந்தத் தவறும் செய்யப்படவில்லை என்று எப்படி நாம் தெரிந்து கொள்ள முடியும்? அதைத் தெரிந்துகொள்ள ஒரே ஒரு வழி மட்டுமே இருக்கிறது, அது என்ன என்று இயேசு நமக்குச் சொல்லுகிறார். அவர், ''ஒருவன் அறிந்து கொள்ள மனமுள்ளவனாயிருந்தால், அவனுக்குத் தெரியும்'' என்று சொன்னார்.

அது உங்கள் இருதயத்தில் காணப்படுகிறது. வேதாகம வசனங்கள் சொல்லியவைகளின்படி செய்வதற்கு சித்தமுள்ளவர் களாயிருந்து, அதன்படி செயல்படும்போது, அது உங்கள் வாழ்க்கையில் பிரம்மாண்டமான மாற்றத்தைக் கொண்டு வருகிறது. நீங்கள் ''அது தேவனுடைய வார்த்தை. அதன்படி நடக்க வேண்டும். வேறு எந்த விளக்கமும் இல்லை'' என்று சொல்லுவீர்கள்.

## அத்தியாயம் 3

## வேதாகமத்தை ஆய்வு செய்வது எப்படி?

வேதாகமத்தை உண்மையாக ஆய்வுசெய்யும்போது நாம் கவனமாகவும், ஞானத்துடனும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆய்வு செய்யும் முறையில் இந்த நான்கு காரியங்களும் அவசியமாகும். கவனித்தல், வியாக்கியானம், செயல்படுத்துதல், சம்பந்தப்படுத்துதல்.

கவனித்தல் முதலாவது வருகிறது. வசனப்பகுதியை வாசிக்கும் போதும், இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டும், ‘‘அது என்ன சொல்லுகிறது?’’ அடுத்து வருவது வியாக்கியானம். இப்போது கேட்க வேண்டிய கேள்வி, ‘‘அதன் அர்த்தம் என்ன?’’ இனி செயல்முறைப்படுத்துதல்: இந்தப் படியில் ‘‘இது எனக்கு என்ன தெரிவிக்கிறது?’’ என்று நீங்கள் கேட்கிறீர்கள். சம்பந்தப்படுத்துதலில் ‘‘வேத வாக்கியங்கள் வேதாகமத்தின் மற்ற எல்லாப் புத்தகங் களுடனும் எப்படித் தொடர்புடையதாயிருக்கிறதா?’’ என்ற கேள்வி கேட்கப்படுகிறது.

வேதவாக்கியங்கள் என்ன சொல்லுகின்றன என்பதையும், அவைகளின் அரத்தம் என்ன என்பதையும் தெரிந்துகொள்ளுதல் முக்கியமானது. ஆனால் அவைகளின்படி நடவடிக்கை எடுக்கா விட்டால் உங்கள் ஆய்வு அர்த்தமற்றதாகிவிடுகிறது. ‘‘செயல் படுத்துதல்’’ என்ற பகுதிக்கு வரும்போது அந்த விரிவான கேள்வியைக் குறிப்பாகக் கேட்கும்போது, அந்த வசனப்பகுதி உங்களுக்கு என்ன தெரிவிக்கிறது என்பதைக் கண்டுகொள்ள முடியும். இந்தக் கேள்விகளைக் கேட்டு ஆரம்பியுங்கள்.

- ❋ பின்பற்ற வேண்டிய எடுத்துக் காட்டுகள் இருக்கின்றனவா?
- ❋ கவனம் செலுத்த வேண்டிய எச்சரிக்கைகள் இருக் கின்றனவா?
- ❋ கீழ்ப்படியவேண்டிய கட்டளைகள் இருக்கின்றனவா?
- ❋ விட்டுவிட வேண்டிய பாவங்கள் இருக்கின்றனவா?
- ❋ தேவனைப்பற்றி அல்லது இயேசு கிறிஸ்துவைப்பற்றி புதிய சத்தியங்கள் இருக்கின்றனவா?
- ❋ என் சொந்த வாழ்க்கையைப்பற்றி ஏதாவது புதிய உண்மைகள் தெரிகிறதா?

வேதாகமத்தை ஆய்வு செய்வதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. வேத வாக்கியங்களின் ஒரு பகுதிக்கு வரும்பொழுது இதை ஞாபகத்தில் வையுங்கள். ஒரே ஒரு வியாக்கியானம் மட்டும் இருந்தாலுங்கூட, அதை ஆயிரக்கணக்கான வழிகளில் செயல்படுத்த முடியும். குறிப்பிட்ட ஒரு வேதாகமப்பகுதியை எப்படி உங்கள்



வாழ்க்கையில் செயல்படுத்தப்பட முடியும் என்று நீங்கள் நன்கு உணரலாம். ஆனால் அந்த வேதாகப் பகுதி மூலமாக, மற்றொருவர் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் வேறு விதமாகக் கிரியை செய்ய லாம்.

இரண்டாவதாக, வேதாகமம் கிறிஸ்துவைப் பற்றிய ஒரு புத்தகமாக இருப்பதால், நீங்கள் ஆய்வு செய்யும்போது வேதவாக் கியங்கள் முழுவதும் கிறிஸ்துவைப்பற்றிக் கூறுகிறதா என்று பார்க்க வேண்டும். மூன்றாவதாக, உங்களுக்கு புதிராக அல்லது மறைவாக விளங்காமல் இருக்கும் ஒரு வசனத்திற்கு வரும்போது, தெளிவான அர்த்தமுடைய வசனங்களின் ஒளியில் எப்பொழுதும் வியாக்கியானம் பண்ணுங்கள். புரிந்துகொள்ளக் கடினமான வசனங்கள் ஏராளமாக இருக்கின்றன. புரிந்துகொள்ளத் தெளிவான வசனங்களும் இருக்கின்றன. மிகவும் கடினமான வசனங்களைப் பற்றிய உங்கள் எண்ணத்துக்கு வழிகாட்ட தெளிவான வசனங்களைச் சார்ந்திருங்கள்.

அடுத்து முக்கியமானது. ஒரு வசனத்தின் அர்த்தம் என்ன என்பதைப்பற்றி ஏற்கெனவே உங்கள் மனதில் ஒரு கருத்தை வைத்துக் கொண்டு ஒரு வேதவாக்கியப்பகுதியை ஒருபொழுதும் அணுகாதீர்கள். நீங்கள் அதைக் குறித்து கொண்ட கருத்து முழுவதும் சரியானதாக இருக்கலாம். இல்லாமலுமிருக்கலாம்! உங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்ற நிச்சயத்துடன் நீங்கள் வேத பகுதியை வாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குப் போதிப்பது கடினம்.

மற்றொரு முக்கியமான கோட்பாடு: குறிப்பாக நீங்கள் வேதவாக்கியங்களைப் போதிப்பதாயிருந்தால், மற்றவர்களுக்கு அதை நீங்கள் போதிப்பதற்கு முன்பாக நீங்கள் அதற்குக் கீழ்ப்படிய விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும். இங்கே இன்னொரு காரியம் இருக்கிறது. தேவன் எப்பொழுதும் தமது வார்த்தை மூலம் பேசுகிறார் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். எனவே தேவனுடைய வசனங்களை ஜெபத்துடன் நெருங்கி, பரிசுத்த ஆவியானவர் மூலமாக நேரடியாக உங்களுக்குக் காரியங்களை வெளிப்படுத்தும் படிக் கேட்டுக் கொள்ளுங்கள்.

இங்கே மற்றொரு குறிப்பு. எப்பொழுதும் வேதவாக்கிய பகுதியின் சந்தர்ப்ப சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளுங்கள். அப்படி இல்லாவிடில் உங்களால் சரியான விளக்கம் பெற முடியாது.

இது போலவே, நீங்கள் ஒரு வசனத்தை அதோடுகூட உள்ள வசனங்களிலிருந்து தனிப்படுத்தும் போது, அந்த வேதவாக்கியத்தை பெரும்பாலும் எந்தக் காரியத்தையும் நிரூபிக்கப் பயன்படுத்த முடியும். மேலும், அது தவறான வியாக்கியானத்துக்கு வழிநடத்தும்.

இப்போது, முதலாவது புத்தகமான ஆதியாகமத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளுவோம். இந்தத் துவக்க நிலையில் ''நீங்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு உட்செல்லுகிறீர்கள்... தேவனுடைய வார்த்தைகள் உங்களுக்குள் செல்லட்டும்'' என்பதே உங்களுக்கான என்னுடைய ஜெபமாயிருக்கிறது.

## அத்தியாயம் 4

## ஆதியாகமம் - துவக்கங்களைப் பற்றிய ஒரு புத்தகம்

ஆதியாகமப் புத்தகம் துவக்கங்களைப் பற்றியது. ''ஆதி'' என்ற சொல் ''துவக்கம்'' என்ற அர்த்தமுடையது. இந்தப் புத்தகம் வேதாகமத்தின் முதல் புத்தகமாக அமைக்கப்பட்டிருக்கிறது, ஆனால் துவக்கங்களைப்பற்றிய ஒரு புத்தகமாகவும் இருக்கிறது. அது விவரிக்கும் முதல் துவக்கம் உலகத்தின் ஆரம்பம்.

ஆதியாகமத்தில், மனிதன் துவக்கத்தில் எப்படியிருந்தான், இப்பொழுது எப்படியிருக்கிறான் என்று தேவன் கூறுகிறார். இது நம்மைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள உதவுகிறது. அவர் பாவத்தைப் பற்றி நமக்குச் சொல்லுகிறார். பாவம் எப்படித் துவங்கியது என்பது, அது எப்படி இன்று நம்மைப் பாதிக்கிறது என்பதைக்காண உதவுகிறது. அவர் மனிதனுடன் தம்முடைய பேச்சுத் தொடர்பைக் காட்டுகிறார். அந்த முதல் சிறிய சம்பாஷணைகள், நம்மோடு அவர் எப்படித் தொடர்புகொள்ளுகிறார் என்பதை நாம் காண உதவுகிறது.



காயீனுக்கும், ஆபேலுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில், சண்டை எப்படி ஆரம்பிக்கிறது என்று நாம் பார்க்கிறோம், அதன் மூலம் இன்று நாம் அனுபவத்தில் காண்கிற சண்டைகளைப் பற்றிப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறோம்.

ஆறுமுதல் ஒன்பது வரையிலான அதிகாரங்களில் உலகத்தின் முதல் பயங்கமான வெள்ளப் பெருக்கைப் பற்றி நாம் வாசிக்கிறோம். இந்தச் சம்பவத்தில், இரட்சிப்பைப் பற்றிய ஒரு காட்சியைக் காண்கிறோம். நோவாவினுடைய விசுவாசத்தால், அழிவிலிருந்து தேவன் அவனைக் காப்பாற்றினார். நமக்கு விசுவாசமிருந்தால், நாமுங்கூட பாவத்தின் அழிவிலிருந்து இரட்சிக்கப்படுவோம்

இந்தப் புத்தகத்தின் மற்றப் பகுதிகள் முழுவதிலும், இறுதியில் தேவன் மட்டுமே எல்லாவற்றையும் ஆளுகை செய்கிறார் என்பதைக் காண்கிறோம். இன்று உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சி ஆதியாகமம் புத்தகத்தை வாசிக்கத் துவங்குவது. அப்படிச் செய்யும் போது உங்களிடமே இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

- ❈ அது காரியங்கள் எப்படியிருந்தன என்பதைப் பற்றி என்ன சொல்லுகிறது?
- ❈ காரியங்கள் இன்று எப்படியிருக்கின்றன என்பதைப் பற்றி அது குறிப்பாக உணர்த்துவது என்ன?
- ❈ இது என்னுடைய கருத்தையும், என்னுடைய வாழ்க்கையையும் எப்படி மாற்றும்?

## அத்தியாயம் 5

## படைப்பு நம்பக் கூடியதா?

ஆதியாகமம் - வேதாகமம் முழுவதுமே படைப்பைப்பற்றிய கதையோடு துவங்குகிறது.

அவ்வளவு முக்கியமாக இந்தாலும், துவக்கத்தைப் பற்றிய வர்ணனையை ஒன்றரை அதிகாரத்தில் மட்டுமே காண்கிறோம். ஏன்

அப்படி என்று நீ நினைக்கிறாய்? தேவன் நமக்கு எந்த விளக்கமும் அளிக்க வேண்டிய கடமைப்பட்டவரல்ல. படைப்பைப் பற்றிய தத்துவம் மெய்யானது என்று நிரூபிப்பது அவருடைய நோக்கமல்ல. அவரையும், அவருக்கு நம்மோடுள்ள உறவையும் நாம் தெரிந்து கொள்ள உதவும் சத்தியங்களை நிலைநாட்டுவதே அவருடைய நோக்கமாகும்.

இருந்தாலும், வேதாகமத்தில் அடிக்கடி விவாதிக்கப்படும் பிரச்சினையாக இருக்கும் காரியத்தைப்பற்றி விவாதிக்காமல் இந்தப் புத்தகத்தைக் கடந்து நாம் செல்ல முடியாது. ஒருவேளை அது படைப்பைப் பற்றிய இரண்டு அடையாளமான முனைகளா யிருக்கலாம். முதலாவதாக, படைப்பைப் பற்றி ஆதியாகமத்தில் கொடுக்கப்பட்டவை விஞ்ஞானரீதியில் நம்பகமான தல்ல, அதனால் வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளினால் ஏவப்பட்டதாக இருக்க முடியாது என்ற நிலை. அடுத்த முனையில், ‘‘வேதாகமம் விஞ்ஞானரீதியில் நம்பகமானதா?’’ என்ற கேள்வி அல்ல, ஆனால் ‘‘விஞ்ஞானம் வேதாகமரீதியில் நம்பத்தகுந்ததா?’’ என்பதாயிருக்க வேண்டும் என்ற நிலை. இந்த நிலையை தாங்குபவர்கள், ‘‘வேதாகமம் ஒரு பரிசோதனையல்ல, விஞ்ஞானமே பரிசோதனையி லிருக்கிறது’’ என்கிறார்கள்.

இதன் உண்மையான பிரச்சினை: உலகம் எப்படி உருவானது என்ற கேள்விக்கு வரும்போது வேதாகமும் விஞ்ஞானமும் முரண்பாடில்லாமலிருக்கின்றனவா?

நாம் சில காரியங்களைப் பார்வைக்குக் கொண்டு வருவது அவசியம். முதலாவதாக, விஞ்ஞானத்தின் உண்மையான இயல்பு தேவன் மேல் நம்பிக்கை வைக்க இடமளிக்கவில்லை. இது, ஒரு விஞ்ஞானியால், ஒரு பக்தியுள்ள விசுவாசியாக இருக்க முடியாது என்று சொல்லுவதல்ல. ஆனால் விஞ்ஞானமே நம்மால் கவனிக்கப் பட்டு, பொருள் சம்பந்தமாக அளக்கப்பட்டு, கணக்கிடப் பட்டு நிரூபிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் பற்றிய ஆய்வு, அது சோதனைகள், முடிவுகள், செயல்படுத்தப்பட வேண்டியவைகள் ஆகியவைகளின் அடிப்படையிலாவது. அது கட்டுப்படுத்தப்பட்டது.



கட்டுப்படுத்தக் கூடியது. தேவனுடைய உண்மையான இயல்பானது இந்தவகை ஆய்வுக்குள் வர முடியாது. விஞ்ஞான முறையில் தேவனை அணுகுவது முடியாத காரியம். தேவனிடத்தில் வருவதற்கான ஒரே வழி எபிரெயர் 11:6 சொல்லுவது போல விசுவாசத்தின் வழி: ‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரிய மாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர் களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்’’.

‘‘ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்’’ *(ஆதியாகம் 1:1)* என்று வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம் இன்னும், ‘‘பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது, ஆழத்தின்மேல் இருள் இருந்தது, தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்’’ (2) என்று வாசிக்கிறோம்.

ஆவியானவர் இந்த சிருஷ்டியின் மேல் அசைவாடி, திறமையாகக் கையாண்டு அதை மாற்றினார். எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 1:9, அப்போது தேவன், ‘‘வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது’’ என்றார்.

‘‘வெட்டாந்தரை உண்டாகக் கடவது’’ என்று தேவன் சொல்லவில்லை. சிருஷ்டிப்பின் முதல் நடவடிக்கையிலே அது ஏற்கெனவே சிருஷ்டிக்கப்பட்டாயிற்று, ஆனால் அது ஜலத்தினடியில் இருந்தது. இந்த வசனத்தில் அது வெளிக் கொண்டுவரப்பட்டது. இந்தப் பூமி முழுவதும் தண்ணீருக்கடியிலிருந்தது என்று விஞ்ஞான சமூகம் நிச்சயமாகக் கூறுவது உற்சாகமூட்டுவதாயிருக்கிறது.

‘‘பாரா’’(bara) அல்லது ‘‘சிருஷ்டி’’(create) என்பது வெறுமையி லிருந்து ஏதோ ஒன்றை உண்டுபண்ணுவதாகும். சிருஷ்டிப்பபைப் பற்றிய விளக்கங்களில் இந்தச் சொல் மூன்று முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாம் வசனத்தில், துவக்கத்தில் தேவன் சிருஷ்டித்தார் என்று காண்கிறோம். ‘‘பாரா’’ என்ற சொல்லின் முதல் நடவடிக்கையில் சர்வலோகமும், பூமியும், தாவர உயிரினங்களும் அடங்குகின்றன. வசனங்கள் 2 மற்றும் 20 ஆகிய

வசனங்களுக்கிடையேயுள்ள மற்ற சொற்கள் வித்தியாசமானவை. அவை மாற்றத்தை குறிப்பிடும் சொற்கள் அல்லது இருக்கும் ஒரு பொருளை எடுத்து அதன் வடிவத்தை மாற்றுவது என்பதாகும். சிருஷ்டிப்பின் அடுத்த நடவடிக்கை தண்ணீருக்குள் நடை பெறுகிறது. 21-ஆம் வசனத்தில், ''தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார், தேவன் அது நல்லது என்று கண்டார்'' என்று வாசிக்கிறோம்.

மறுபடியும் வேதாகம விளக்கத்துக்கும் விஞ்ஞானத்துக்கு மிடையே ஒரு இணக்கமிருக்கிறது. மிருக ஜீவன் தண்ணீரில் ஆரம்பித்தது என்று விஞ்ஞானிகள் மிகவும் உறுதியாயிருப்பது போல் தோன்றுகிறது, ஆதியாகம வர்ணனையும் இதுவே.

பாராவின் அடுத்த நடவடிக்கை வசனம் 27-இல் நடை பெறுகிறது. ''தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்''.

ஆதியாகமத்தில் சிருஷ்டிப்பின் வெளிப்படுத்துதல் சர்வலோகத் திலுள்ள எல்லாவற்றிற்கும் துவக்கங்கள் என்று விவரிக்கிறது, அப்படியிருந்தாலும், ஆதிசிருஷ்டிப்பை தேவனுடைய ஆவியானவர் மாற்றமடையச் செய்து வளர்ச்சியடையச் செய்கிறார். ஜீவனுள்ள வைகள் படிப்படியாக வளர்ச்சியடைவதைப் பற்றிய விஞ்ஞானிகள் கருத்துக்கு இது இணையாயிருக்கிறது, பரிமாண வளர்ச்சியைப் பற்றிய சிந்தனையில், இந்தக் கருத்தைப் பற்றி நான் இணையான ஒரு கருத்தைக் காண்கிறேன்.

சிருஷ்டிப்பை ஆதரிப்பவர்களுக்கும் பரிமாண வளர்ச்சி கொள்கையை ஆதரிப்பவர்களுக்கும் வேற்றுமை தொலைந்து போன மூன்று வளையங்களில் ஏற்படுகிறது என்று நான் கருதுகிறேன். நான் கூறும் பிரச்சினையில் தொலைந்துபோன மூன்று வளையங்கள் மூன்று கேள்விகளில் குவிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாம் எப்படி ஆரம்பித்தன? தாவர ஜீவன் எப்படி மிருக ஜீவனானது? மிருக ஜீவன்



எப்படி மனித ஜீவனாக மாறியது? இந்தத் தொலைந்து போன மூன்று வளையங்களுக்கும் விஞ்ஞானத்தில் விளக்கமில்லை. ஆனால் ஆதியாகமத்தில் இருக்கிறது. ஆதியாகம விளக்கத்திற்கானப் பதில் 'பாரா' - தேவன் சிருஷ்டித்தார்.

## அத்தியாயம் 6

## மனுக்குலத்தின் பிறப்பு

சர்வலோகத்தின் துவக்கங்களைப் பற்றி நாம் பார்த்தோம். இப்போது நாம் தனிப்பட்ட முறையில் பார்ப்போம். இந்த அத்தியாயத்தில், மனிதனின் ஆரம்பத்தைப் பற்றி ஆதியாகம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். ஆதியாகமப் புத்தகத்தின் நோக்கம், துவக்கம் எப்படியிருந்ததோ அதை அப்படியே சொல்லி, நம்மை அப்படியே வினங்கச் செய்வதாகும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். மனுக்குலத்தின் ஆரம்பத்தைப் பற்றிய பாடப் பொருளுக்கு நாம் வரும்போது, நம்மைப்பற்றிய பாடப் பொருளுக்கே வருகிறோம். மனிதனை சிருஷ்டித்ததில் தேவனுடைய நோக்கம் என்ன என்று ஆதியாகமம் சொல்லுகிறது? மனிதனும், பெண்ணும் எப்படி உருவானார்கள் என்பதைப்பற்றி விளக்கத்தை வாசித்து நாம் துவங்குவோம்.

''பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, அவர்கள் சமுத்திரத்தின் மச்சங் களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவை களையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனியாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை

அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார் *(ஆதியாகமம் 1:26 - 28, 2:18, 21-24).*

**தேவனுடைய சாயலாக**

இந்த வசனப்பகுதியில் தனியாக எடுத்துக் காட்டும் முதல் காரியம், மனிதனை தேவனுடைய சாயலாகவும், தம்முடைய சாயலாகவும் சிருஷ்டித்தார் என்பதே. அவைகளின் உண்மையான அர்த்தம் என்ன? தேவன் ஆவியாயிருக்கிறார் என்பதால், அவருக்கு ஒரு சரீரமில்லை என்பதால் நம்மைப் போலிருப்பார் என்று குறிப்பிடவில்லை. அது நாம் ஆவியின் வடிவத்தில் இருக்கும் தன்மையைக் குறிப்பிடுகிறது. ஆதியாகமம் 3-ஆம் அதிகாரத்தில், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபொழுது, தேவனுடைய சாயல் இல்லாமல் போயிற்று என்று நாம் காண்கிறோம். அந்த இடத்திலிருந்து வேதவாக்கியங்கள் சொல்லும் அடிப்படைப் பிரச்சினை, மனிதனுக்குள் தேவனுடைய சாயலை ''திரும்பவும் உருவாக்குவதைப்'' பற்றியது. ஆதியாகமம் 1,2-ஆம் அதிகாரங்கள் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டபடி அவன் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. மூன்றாவது அதிகாரம் அவன் எப்படி இருக்கிறான் என்பதைத் தெரிவிக்கிறது.

**ஆணும், பெண்ணுமாக**

சிருஷ்டிப்பைப்பற்றி நாம் கண்டுகொள்ளும் மற்றொரு காரியம் அவர் அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்தார் என்பதாகும். இது மயக்கமருந்து கொடுத்து செய்யப்பட்ட அறுவை சிகிச்சையின் முதல் எடுத்துக்காட்டு. முதலில் மயக்கமருந்தைப் பயன்படுத்தியவர் தேவன்! அவர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை உண்டாக்கினார், பின்னர் அவனுடைய விலா எலும்பு ஒன்றை எடுத்து, அதிலிருந்து பெண்ணை சிருஷ்டித்தார். இங்கு ஒரு கருத்தை சங்கேதக்



குறியீடுகளால் தெரிவிப்பது அழகாயிருக்கிறது. தன்னை அவள் ஆளும்படியாக மனிதனுடைய தலையிலிருந்து தேவன் பெண்ணை உருவாக்கவில்லை, அவன் அவளுக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்பதற்காக அவனுடைய காலிலிருந்து எடுக்கவில்லை. அவர் பெண்ணை, அவனுடைய இருதயத்துக்கு அருகில் இருக்கும்படி மனிதனுடைய பக்கத்திலிருந்து எடுத்தார்.

தேவன் ஏன் பெண்ணை சிருஷ்டித்தார்? ''தனியாக'' (alone) என்ற சொல்லுக்குரிய எபிரெய பதம், ''முழுமையாகாமல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ''ஏற்றதுணை'' என்பதும் ''முழுமையாக்குபவனை'' என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கலாம். எபிரெய சொல்லிலக்கணப்படி இந்தப் பெண்ணை இன்று நாம் ''பரிசுத்த விவாகம்'' என்றழைக்கப்படும் பால் உறவுக்குள் கொண்டு வரும்போது, ஆணும் பெண்ணும் ஐக்கியமாகி ஒரே மாம்சமாகும் போது அவன் ஒரு முழுமையான மனிதனாகிறான்.

தேவன் அந்த மனிதனையும், அந்தப் பெண்ணையும் ஒன்றாகக் கொண்டுவந்தபோது, இன்று உலகத்திலிருக்கும் மிகவும் முக்கியமான நியமனத்தைக் கொண்டுவந்தார் என்பதைக் குறித்துக் கொள்ளுவது முக்கியம். நாம் அதைக் குடும்பம் அல்லது இல்லம் என்றழைக்கிறோம். அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்ததில் தேவனுடைய திட்டம், இரண்டு நபர்களை எடுத்து அவர்களைத் தோழமைத்துவத்தில் ஒன்று சேர்த்து, அதனால் அவர்கள் பொற்றோர்களாக வேண்டுமென்பதே. பின்னர், பெற்றோர்களான அவர்கள், மக்களை உருவாக்கி, அவர்கள் பெற்றோராகி மக்களை உருவாக்கி, அவர்களைத் தோழர்களாகவும் பெற்றோர்களாகவும் ஆக்குவார்கள். மானிடக் குடும்பம் முழுவதையும் பிறப்பித்து, போஷித்து, வழிகாட்டும் மிகப்பெரிய வாழ்க்கையின் பிரமாணம் இது.

வாழ்க்கையின் தேவனுடைய அடிப்படை விதியின் மிக முக்கிய பகுதி, ஒரு மனிதனுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையேயுள்ள தோழமைத்துவம். இதற்காகவே தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஒரு முக்கோணத்தில் தேவனை மேலேயும், கீழே இடது முனையில் மனிதனையும் வலது முனையில்

பெண்ணையும் வைத்துச் சித்தரித்துப் பாருங்கள். மனிதன் தேவனுடைய உறவினனாகவும், பெண் அதே தேவனுக்கு உறவுடையவளாக வுமிருந்தால், அந்த மனிதனும் அந்தப் பெண்ணும் தேவனுக்கு அருகே நெருங்குகிறார்கள், அப்போது அவர்களும் ஒருவருக்கொருவர் அருகே நெருங்குகிறார்கள்.

ஆதியாகமப் புத்தகத்தில் விவாகத்தைப் பற்றி அது இரண்டு கருத்துக்களைக் கூறுகிறது. விவாகத்தின் காரணமாக, ஒரு மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு விலகுகிறான். இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் ஒன்றாகச் செலவிட்ட குடும்பத்திலிருந்து அவன் விலகுகிறான். மேலும் விவாகத்தின் காரணமாக அவன் மற்றவர்கள் எல்லாரையும் விட்டுவிடுகிறான். தன் வாழ்க்கையின் மீதி நாட்களை தன் மனைவியுடன் தனியாக அவன் வாழ வேண்டும். அந்தப் பெண்ணும் கணவனுடன் வாழ வேண்டும். விவாகத்துக்கான தேவனுடைய வரைபடம் இதுவே.

## அத்தியாயம் 7

## நீ எங்கே இருக்கிறாய்?

ஆதியாகமப் புத்தகத்தில், நன்றாகத் தெரிந்த பகுதி மூன்றாம் அதிகாரம், இங்கே ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியைப் புசிக்கின்றனர். அதிகாரம் இரண்டு, மனிதன் தேவனால் சிருஷ்டிக்கப் பட்டு, அவர் விரும்பியபடி வாழ்க்கையை வாழ்வதைக் காட்டுகிறது. பாவம் - அப்போதும், இன்றைக்கும் எப்படியிருந்தது என்பதை இந்த அதிகாரம் காட்டுகிறது. நாம் எல்லாரும் ஒவ்வொரு நாளும் சந்திக்கும் அதே தீர்மானத்தை ஆதாமும் ஏவாளும் சந்திப்பதை இது காட்டுகிறது. நாம் தேவனுடைய வழியில் போகப் போகிறோமா அல்லது நம்முடைய சொந்த வழியைப் பின்பற்றப் போகிறோமா? தேவன் நம்மைத் தேர்வுசெய்யும் ஜீவிகளாக உருவாகியிருக்கிறார். இதனால், நாம் தேவனுடைய சித்தத்தின்படிச் செய்ய முடியும், அல்லது நம்முடைய விருப்பப்படிச் செய்ய முடியும். மூன்றாவது அதிகாரம் முதல் தடவை நிகழ்ந்த ஆபத்தான நிலையை விவரிக்கிறது. இதுபோலத்தான் நம்முடைய வாழ்க்கையில் இப்போது நடக்கிறது.



தெரிந்து கொள்ளுதல் மனிதனிடம் விடப்பட்டுள்ளது. அதிகாரம் 2:8,9 ஆகிய வசனங்களில் சற்று முன்பாக இந்தப் பின்னணி விவரிக்கப் பட்டது.

கர்த்தராகிய தேவன் ஏதேனின் கிழக்குப் பக்கமாக ஒரு தோட்டத்தை நட்டு உருவாக்கினார்.

அவர் உருவாக்கிய மனிதனை அவர் அங்கே வைத்தார். அங்கே அந்த நிலத்தில் கர்த்தராகிய தேவன் பார்வைக்கு இன்பமானதும், புசிப்பதற்கு நல்லதுமான ஒவ்வொரு மரத்தையும் வளர்த்தார். தோட்டத்தின் மத்தியில் ஜீவ விருட்சமும், நன்மை தீமை அறியத்தக்க மரமும் இருந்தன.

எங்கேயோ மக்கள் தவிர்க்கப்பட்ட மரம் ஆப்பிள் மரம் என்ற கருத்தைப் பெற்றிருக்கிறார்கள், ஆனால் ஆப்பிள் பழத்தைப்பற்றி இங்கேயோ மூன்றாம் அதிகாரத்திலோ சொல்லப்படவில்லை. அதற்குப் பதிலாக, நாம் ஜீவ விருட்சத்தைப் பற்றியும் நன்மை தீமை அறியத்தக்க மரத்தைப் பற்றியும் வாசிக்கிறோம்.

இதைக் கடந்து போகுமுன், இங்கே பயன்படுத்தப்பட்ட மொழியின் வகையைப் பற்றி நாம் பேசுவது அவசியம். இந்தச் சம்பவம் வரலாறாகும். ஆனால் இது உருவாகமான கதையுமாகும். உருவகம் (allegory) என்பதில், மக்கள், இடங்கள், பொருட்கள் ஆகியவைகளுக்கு வரலாற்று முக்கியத்துவம் அல்லது வெளிப் படையான அர்த்தத்தோடு இன்னொரு அர்த்தமுமுடைய ஒரு கதையும் அதில் காணப்படும். அது நன்னெறிப் போதனையாக இருக்கும்.

ஏதேன் தோட்டத்தின் வர்ணனையில், நாம் வாசிக்கும் மரங்களின் வகைகள், இந்த இடத்தில் தேவன் மனிதனுடைய தேவைகளைச் சந்திக்கப் போகிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. முன்னுரிமையைக் கவனியுங்கள். முதலாவது இந்த மரங்கள் மனிதனுடைய பார்வையைத் திருப்திப்படுத்த வேண்டிய தாயிருக்கிறது, இதன் பின் அவனுடைய உணவு தேவைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதன்பின் அவைகள் அவனுக்கு உயிரளிப்பதாயிருக்க வேண்டும். அங்கே தீமை அறியத்தக்க மரமும் இருந்தது. அது அவர்களது வரம்புக்கு அப்பாற்பட்டது என்று தேவன் தெரியப்படுத்தியுள்ளார்.

மூன்றாவது அதிகாரத்தில், முதல் பாவம் நிகழ்ந்தபோது முன்னுரிமை நிலை மாற்றப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். முதலாவது பார்வை, இரண்டாவது உண்பது, மூன்றாவது ஜீவனம் என்றும் நான்காவது அறிவு தெளிவது என்று எழுதுவதற்கும் பதிலாக அவர்கள் புசிப்பதை முதலிலும, பார்வையை இரண்டாவதும் மூன்றாவது அறிவு தெளிவதையும் எழுதியுள்ளதைக் காண்கிறோம். ஜீவனுக்கு வரவேயில்லை. இதற்குப் பதிலாக அவர்கள் ஆவிக்குரிய மரணமடைந்தனர். உபாகமம் 8:3-இல் ''மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்'' என்று வாசிக்கிறோம். நம்முடைய தேவைகளைச் சந்திப்பதற்காகவும், சொந்த விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும் மட்டுமே வெளியே போகும்போது நாம் உண்மையாக வாழவில்லை. இந்த வசனத்தின்படி, ஒருமனிதன் தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படியும்போது உண்மையான வாழ்க்கை வாழ்கிறான்.

ஆதாமையும் ஏவாளையும் தேவன் தோட்டத்தில் வைத்த போது, அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுத்திருந்தார். அவர்களுடைய தேவைகள் அவருக்குத் தெரியும். ஏனெனில் அவரே அவர்களை உருவாக்கினவர். நம்மையும் அவர் உருவாக்கியதால், நம்முடைய தேவைகளைப் பற்றியும் அவருக்கு நன்றாகத் தெரியும். அவைகளை நமக்குக் கொடுப்பதற்கான எண்ணமும் அவருக்கு இருக்கிறது.

இப்போது, முன்னுரிமைப் பட்டியலில் ஏன் பார்வை முதலாவது வந்ததென்று நீங்கள் வியப்படையலாம். வேதவாக்கியங்கள் கண்ணைக் குறிப்பிடும்போது, அது சொற்பிரகாரமான கண்ணைக் குறிப்பிடுவதல்ல, எடுத்துக்காட்டாக மத்தேயு 6:22-23-இல் இயேசு, ''கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்'' என்று சொன்னார். இயேசு சரீரப் பிரகாரமான பார்வையைப் பற்றிப் பேசவில்லை. அவர், நாம் காரியங்களை எப்படிப் பார்க்கிறோம், நம்முடைய மன அமைப்பு, வாழ்வதைப் பற்றிய நம்முடைய வெளிப்பார்வை ஆகியவற்றைப் பற்றிப் பேசினார்.



ஏதேன் தோட்டத்தில் பார்வைக்கு இன்பமான ஒன்றை உயர்ந்த முன்னுரிமையுடன் தேவன் வைத்த போது, உண்மையில் அவர் தங்களது மிகப்பெரிய தேவைகளைச் சந்திக்க அவரை நோக்கிப்பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார். அவர்களுக்கு இருந்த மிகப்பெரிய தேவையும், நமக்கிருக்கும் மிகப்பெரிய தேவையும், நாம் எப்படிக் காரியங்களை நடத்த வேண்டும் என்பதை தேவன் நமக்குக் காட்டுவதற்கு அனுமதிப்பதேயாகும்.

இந்த அதிகாரத்தில் மற்றொரு சித்திரமும் கூட இருக்கிறது. ஆதாமும் ஏவாளும் சோதனைக்கு இடங்கொடுத்தபின், கர்த்தராகிய தேவன் தோட்டத்தில் பகலில் குளிர்ச்சியான வேளையில் நடந்து கொண்டிருந்த அவருடைய சத்தத்தைக் கேட்டார்கள், ஆதாமும் அவன் மனைவியும் தோட்டத்திலிருந்த மரங்களினிடையே சென்று கர்த்தராகிய தேவனின் சமுகத்திலிருந்து தங்களை மறைத்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, ''நீ எங்கே இருக்கிறாய்?'' என்றார் (8-9).

தேவன், ஆதாம் ஏவாளோடு, ''நீ எங்கே இருக்கிறாய்?, நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்?'' (ஆதியாகமம் 3:9-11) என்ற கேள்விகளைக் கேட்டு சம்பாஷணையைத் துவங்குவது கவனத்தை ஈர்ப்பதாக இருக்கிறது. அவருக்கு முன்னரே பதில் தெரியும். ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தெரியாத காரியங்கள் இருந்தததால் தேவன் இந்தக் கேள்விகளைக் கேட்டார். அவர்களை சிந்திக்க வைக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கேள்விகளைக் கேட்டார். தேவன், ''நீ எங்கே இருக்கிறாய்?'' என்று கேட்டபொழுது அவர் உண்மையில், ''நீ ஏன் என்னிடமிருந்து ஒளிந்து கொண்டிருக்கிறாய்?'' என்பதே பொருள்படுகிறது.

ஆதாம் தான் நிர்வாணியாயிருப்பதால் ஒளிந்து கொண்டிருப்பதாக அறிக்கையிட்டதைத் தொடர்ந்து தேவனுடைய இரண்டாவது கேள்வி வருகிறது. ''நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்?'' எபிரெய மொழியில் இந்தக் கேள்வி ''யார் உனக்கு அதைத் தெரிவித்தான்?'' எனப்படும். நிச்சயமாக இதற்கு சரியான பதில், இந்தக் கேள்வியின் சரியான பதிலுக்கும் அவரே நிச்சயமாக மூலக்காரணராயிருந்தார். தேவன் சில செய்திகளை நமக்குக்

கொடுக்க விரும்புகிறார், சிலவற்றை நம்மிடம் கொடுப்பதில்லை. ஆனால் அவருக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை.

ஆவிக்குரிய பிரகாரமாய் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை நாம் சிந்தித்தால், நாம் எங்கே இருக்கிறோம், எங்கே இருக்க வேண்டும் என்று தேவன் ஒருவரே நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

அடுத்ததாகத் தேவன் ''புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின் விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ?'' என்று கேட்கிறார். ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அதன் விளைவுகளால் பாதிக்கப்பட்டு, அத்தி இலைகளைத் தங்கள் சரீரங்களில் வைத்துக் கொண்டு மரங்களிடையே ஒளிந்திருந்தார்கள். உங்களுக்குப் பிடிக்காத தவறான விளைவுகளை வாழ்க்கையில் சந்திக்கும் போது உங்களிடம் இந்தக் கேள்விகளைக் கேளுங்கள்: ''தவறான மரத்திலிருந்து சாப்பிட்டேனா? தேவனுடைய வார்த்தைக் குக் கீழ்ப்படியாமல் இருந்தேனா? என் வாழ்க்கையில் அவருடைய வழியை நிராகரித்தேனா?''.

தேவனுடைய நான்காவது கேள்வி, ஏவாளுக்கு நேரானது, ''நீ இப்படிச் செய்தது என்ன?'' இது ஏவாள் தன் தவறை அறிக்கை யிடும்படி எதிர்பார்த்த ஒரு கேள்வி. அறிக்கையிடுவது என்பது நீங்கள் செய்தவைகளைப்பற்றி தேவனிடம் ஒத்துக் கொள்ளுவது என்பதே. உண்மையாக என்ன நடந்தது என்று ஏவாள் எல்லா உண்மைகளையும் சொல்லும்படி விரும்பினார். நாமும் அப்படியே செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் என்ன செய்தோம் என்பதைத் தெரிந்து கொண்டு, அதை எதிர்த்து நாம் கபடமில்லாமல் கூறுவதை அவர் விரும்புகிறார்.

ஆதியாகமம் 3, பாவம் செய்த இரண்டு மக்களோடு தேவன் எப்படி இடைப்பட்டார் என்ற ஒரு சித்திரமாயிருக்கிறது, ஆனால் அது பாவம் செய்த நம் எல்லாருடைய சித்திரமாகவும் இருக்கிறது, நாம் பாவம் செய்யும்போது, தேவனிடமிருந்து நடந்தவற்றை மறைக்கும் போது, தேவன் எப்படி அதற்கான நடவடிக்கை எடுக்கிறார் என்பதையும் காட்டுகிறது. அது பாவத்தையும் அதன் விளைவு களையும் பற்றிய ஒரு சித்திரம். தேவன் பாவியோடு தொடர்பு கொண்டு அவனுக்கு வழிகளைக் காட்டும் ஒரு சித்திரமாகவும் இருக்கிறது.



## அத்தியாயம் 8

## உன் சகோதரன் எங்கே?

வேதாகமத்தின் முக்கியமான செய்திகளில் ஒன்று, மனிதன் தேவனோடு ஒப்புரவாகுதலின் அவசியத்தைப்பற்றியது. முதல் பாவம் செய்த உடனேயே ஒப்புரவாகுதலைத் துவங்குகிறார். ஆதியாகமம் 3:15-இல், முதல் மேசியாவின் தீர்க்கதரிசனம் தேவன் சர்ப்பத்தோடு பேசுவதாக இருக்கிறது. ''உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன், அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிகாலை நசுக்குவாய் என்றார்''.

சர்ப்பம் சாத்தானைக் குறிப்பிடுகிறது என்று தெரிந்து கொள்ளும்போது, மனிதனோடு ஒப்புரவாக இந்த உலகத்துக்கு ஒருவரை தேவன் அனுப்பப் போகிறார் என்பதைப் பற்றிய முதல் சங்கேத குறிப்பாக இது இருக்கிறது. ஆதாம் ஏவாள் செய்த பாவத்தின் தீர்க்கதரிசன விளைவு அதுவாகும்.

ஆனால் அநேக எதிரிடையான விளைவுகள் இருக்கின்றன! முதலாவதாக தேவனிடமிருந்து மனுக்குலம் பிரிக்கப்பட்டது. பின்னர் அதிகாரம் 4-இல் வீழ்ச்சியின் மற்றொரு விளைவைப் பற்றி வாசிக்கிறோம் - போராட்டம். போராட்டம் இப்போதும் இருக்கிறது. நமக்குள்ளேயே நாம் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம், நம்முடைய கணவனோடு, மனைவியோடு போராடுகிறோம். நம்முடைய பிள்ளைகளோடும், பெற்றோர்களோடும் போராடுகிறோம். வேலை செய்யுமிடத்தில் போராட்டம், இன்னும் தேசங்களுக்கு இடையிலான போராட்டம். போராட்டம் நம்முடைய முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆதியாகமம் 4-இல், போராட்டத்துக்கான அடிப்படைக் காரணங்களையும், அதைத் தீர்மானிக்கும் சில தீர்வுகளையும் காணலாம். ஆதியாகமம் இரண்டு சகோதரர்களைப் பற்றிய ஒரு கதையின் வடிவத்தில் இந்தச் செய்தியை நமக்குக் கொடுக்கிறது.

இந்தச் சகோதரர்களின் பெயர்கள் நமக்கு நன்றாகத் தெரிந்தது தான் - காயீன், ஆபேல் ஆகியோர் கதையில், தேவனுக்கு ஒரு காணிக்கைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் காயீனுக்கு எழுந்தது. அவன் பூமியைப் பண்படுத்தும் ஒரு விவசாயியாக இருந்ததால், அதிலிருந்து காணிக்கையை தேவனுக்குக் கொண்டு

வந்தான். அவன் சகோதரனாகிய ஆபேல் ஒரு மேய்ப்பன், அதனால் அவன் மிருகபலியைக் கொண்டுவந்தான். ஆபேலினுடைய காணிக்கையை தேவன் ஏற்றுக் கொண்டார், காயீனுடைய காணிக்கையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

அநேகர் ஆபேலினுடைய காணிக்கை மிருகபலியாயிருந்ததால், அதைத் தேவன் ஏற்றுக் கொண்டார் என்று தவறாக நினைக்கிறார்கள். ஆனால் சரியாகப் பார்த்தால் வசனங்களில் அவ்வாறு காணப் படவில்லை. ஆபேலின் காணிக்கை தேவனால் ஏற்றுக் கொள்ளப் படத்தக்கதாக இருந்தது, ஏனென்றால் அவன் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கவனாயிருந்தான். காயீனின் காணிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை, ஏனென்றால் அவன் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கவனாக இல்லை (6-7).

காயீன், ஆபேல் ஆகியோரின் கதைக்கு வரும்போது, அங்கு காணப்படாத ஒன்றை காண்பது எளிதாயிருக்கிறது. மிருகபலியைக் கொண்டுவரும்படிக் காயீனுக்குச் சொல்லப்படவில்லை. உண்மையில் லேவியராகமத்தில், மக்கள் தானியங்களை மட்டுமே பயிரிட்டதால் அதையே காணிக்கையாகக் கொண்டு வரும்படிக் கட்டளையிடப்பட்டனர். எனவே இந்தக் கதையில் எந்த வகை காணிக்கை என்பது முக்கியமானதல்ல, அந்த மனிதர்களே முக்கியமானவர்கள். காயீன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, இதைக் கண்டுபிடித்ததும் அவன் கோபப்பட்டு மனச் சோர்வடைந்தான்.

காயீனுடைய பெற்றோர்களிடம் கேட்டது போல, தேவன் கேள்விகளைக் கேட்கிறார். ''உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முக நாடி ஏன் வேறுபட்டது?'' (6). இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் காயீனின் இறுமாப்பான இருதயம் அந்தச் செய்தியைப் பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை, எனவே தேவன் ''நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும், அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய்'' (7) என்றார். காயீன் பாவத்தை மேற்கொள்ள வில்லை என்பது துக்ககரமானது. வசனம் 8-இல், காயீன் கோப வெறியில் தன் சகோதரனைக் கொன்றான் என்று சொல்லப் பட்டிருக்கிறது.



இன்னொரு முறை கேள்வி எழுகிறது: ''உன் சகோதரன் எங்கே? நீ என்ன செய்தாய்?'' ஆனால் காயீன் இறுமாப்புடன், என்ன நடந்தது தெரிவிக்கும் வரையில் பாவத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறான் (9-10).

ஆதியாகமம் 3-இல் ''நீ எங்கே இருக்கிறாய்?'' என்று கேட்கிறார். நான்காம் அதிகாரத்தில் ''உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே?'' என்று கேட்கிறார். இந்தக் கேள்வியைக் கேட்பதில், உண்மையில் என்ன நடந்தது என்பதைக் காயீன் தெரிந்துகொள்ளும்படி தேவன் முயற்சி செய்கிறார் - தன்னுடைய கோபத்தினால் குற்றமற்ற ஒருவனைக் கொலை செய்தான், உண்மையில் அவன் இன்னும் கோபமாகவே இருக்கிறான். அவனுடைய செயல்கள் எதற்கும் தீர்வு காணவில்லை, மாறாக அவை காரியங்களை இன்னும் மோசமாக்கின.

அதிகாரத்தில் சிறிது பின்னாகப் பார்த்தால், இந்தக் கதை முழுவதுக்கும் வசனம் 7 திறவுகோலாயிருக்கிறது. அது முக்கியப் பிரச்சினையான போராட்டத்திற்குத் தீர்வு அளிக்கிறது. நீங்கள் சரியான காரியங்களைச் செய்தால், தேவனால் ஏற்றுக் கொள்ளப் படுபவராயிருப்பீர்கள், உங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள். தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களைக் கொலை செய்ய அவசியமில்லை. காயீன் ஆபேல் கதைக்கு இணையான ஒரு வேதவாக்கியப்பகுதி மலைப்பிரசங்கத்தில் இருக்கிறது. அது மத்தேயு ஏழாம் அதிகாரத்தில் முதல் ஐந்து வசனங்களில் காணப்படுகிறது. இயேசு மாயக்கார மக்களிடம் கேள்வி கேட்கிறார். ஏன் அவர்கள் அவ்வளவு குறைகண்டுபிடிக்கும் தன்மையுற்றவர்களாயிருக்கிறார்கள் என்றும், அப்படிப்பட்ட ஆவியுடன் எப்படி அவர்கள் பயனுடைய வர்களாயிருக்க முடியும் என்று எண்ண முடியும் என்றும் அவர் கேட்கிறார். அவர் பரிகசிக்கத்தக்க ஒரு எடுத்துக்காட்டைப் பயன்படுத்துகிறார். தன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், மற்ற மக்களின் கண்களிலிருக்கும் துரும்பைப் பார்க்கிறவர்கள் போல அவர்கள் இருக்கிறார்கள் என்றார்.

இந்த வசனப்பகுதி மற்றவர்களை நாம் குற்றம் தீர்க்கக்கூடாது என்று சொல்லுவதாக அநேக மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் இங்கு இயேசு சொல்லவந்ததையே குறிக்கிறது. தேவன் காயீனோடு ''நீ தவறான காரியத்தைப் பார்க்கிறாய். உன் சகோதரனைப்பற்றி

கவலைப்படுவதை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக உன்னை நோக்கிப்பார்'' என்று சொல்லுவதைப் போன்று இயேசு சொல்லுகிறார்.

நல்லவேளையாக ஆபேலின் மரணத்தோடு நன்மைகளும் மரணமடைந்து விடவில்லை.இரண்டு தலைமுறைகளுக்குப்பின் (ஆதியாகமம் 4:26) மனிதன் முதல் தடவையாக தேவனோடு ஜெபத்தில் ஐக்கியமாவதை நாம் பார்க்கிறோம். இதுவரை தேவனுக்கும் மனிதனுக்குமுள்ளத் தொடர்பு எல்லாம் தேவனாலே ஆரம்பிக்கப்பட்டது. இப்போது மனிதன் அதை ஆரம்பித்தான்.

நாம் எல்லாரும் போராட்டத்தைச் சந்திக்கிறோம். சில நேரங்களின் நாம் அதற்குக் காரணம் அல்ல. சில நேரங்களில் நாமே காரணராயிருக்கிறோம். ஆனால் நீங்கள் உங்களுக்கு ஒரு போரட்டம் இருந்தால் உண்மையில் பிரச்சினை என்ன என்று உங்களைக் கேட்டுக்கொண்டு, உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யுங்கள். அதற்குப்பின் ஆதியாகமம் 4:7 புத்திமதியளிக்கிறபடி, தேவனுக்கும் உங்களுக்கும் பிரியமான நேர்மையான காரியங்களைச் செய்யுங்கள். அதனால் ஆபேலை அடித்துக் கொல்லும் வழியில் செல்ல வேண்டாம்.

## அத்தியாயம் 9

## விசுவாசத்தின் பிதா

இப்போது நாம் ஆதியாகமப் புத்தகத்தின் மிகப்பெரிய பகுதிக்கு வருகிறோம். இந்தப் பகுதி வேதாகம கதாபாத்திரங்களில் நன்றாகத் தெரிந்த மூன்று பேரைப் பற்றியது - ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு. ஒரு பாடத்துக்காக ஒதுக்கப்பட்ட இடம், அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்ததாகும். ஆபிரகாமின் கதையைச் சொல்லும் ஆதியாகமத்தின் இந்தப் பகுதியின் கருப்பொருள் விசுவாசம். அடுத்து வரும் பல அதிகாரங்களை நாம் ஆய்வு செய்யும்போது, விசுவாசம் அன்று எப்படி இருந்ததென்றும், இப்பொழுது எப்படி இருக்கிற தென்றும் நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை உணர்வோம்.



வேதாகமத்தின் விசுவாச அதிகாரம் என்றழைக்கப்பட்ட எபிரெயர் 11-இல் இந்தப் பொருளைப்பற்றி இப்படிக் காண்கிறோம்.

''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுபவர்களுக்குப் பலன் அளிக்கிறாரென்றும் விசுவாசிக்க வேண்டும்''.

விசுவாசம் அதிக முக்கியமானதாயிருப்பதால், நாம் விசுவாசத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆபிரகாம் வாழ்க்கையின் மூலம் தேவன் நமக்குச் சொல்லுகிறார். விசுவாசத்தைப் பற்றிக் கூறும்போது வேறு எவரையும் விட வேதாக மத்தில் இந்த மனிதனே புதிய ஏற்பாட்டில் அதிகமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறார். நீங்கள் விசுவாசத்தைப்பற்றி புரிந்துகொள்ள வேண்டுமானால் ஆபிரகாமைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

### அவனுடைய பெயர்

இந்த மனிதன் விசுவாசத்தின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவார். ஆதியாகமம் 11-இன் இறுதியில் நாம் முதலில் அவரைச் சந்திக்கும் போது அவருடைய பெயர் ஆபிராம். இதன் அர்த்தம் ''அநேகப் பிள்ளைகளுக்குத் தகப்பன்'' என்பதாகும். இது 75 வயதான பிள்ளையில்லா ஒருவனுக்கு எதிரிடையாகக் கொடுக்கப்பட்டப் பெயராயிருந்தது! ஆனாலும் தேவன் ஆபிராமிடம், ''உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன், ஒருவன் பூமியின் தூளை எண்ணக் கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்'' (13:16) என்று கூறினார். தேவனுடைய ஒவ்வொரு கட்டளைக்கும் ஆபிராம் விசுவாசத்துடன் கீழ்ப்படிந்ததால், இந்தக் காரியத்தில் அவர் தேவனை நம்பினார் என்று கருதலாம் - பெரும்பான்மையான சமயத்திலாவது (ஆதியாகமம் 16).

### அவருடைய பலிபீடங்கள்

பொதுவாக நாம் ஒரு அருட்பணி நடக்குமிடத்துக்கு அல்லது ஒரு சபைக்கு அல்லது ஒர் ஸ்தாபனத்துக்கு அழைக்கப்படுவதாக நினைப்போம். ஆனால் தேவனிடம் அழைக்கப்படுவதாக நினைப்போமா? எதற்கென்று காரணம் சொல்லாமல் ஜனசஞ்சாரமற்ற வனாந்தரத்துக்குத் தேவன் போகச் சொன்னால் நீ என்ன செய்வாய்? ஆபிராம் 75 வயதாயிருந்தபோது இதுதான் அவனுக்கு நேரிட்டது

(12:1-4). தன் தகப்பன் தன் சொந்த நாட்டையும், எல்லா உறவினர் களையும் விட்டு தாவரங்கள் இல்லா ஒரு பாலைவனத்துக்கு தேவன் ஆபிராமை அழைக்கிறார்.

தேவனுடைய ஒவ்வொரு கதைக்கும் இரண்டு பக்கங்கள் இருப்பது போல இந்தக் கதைக்கும் உள்ளன. தேவனை நோக்கிய பக்கம், மனிதனை நோக்கிய பக்கம். தேவனை நோக்கிய பக்கத்தைப் பற்றிக் கற்றுக்கொள்ள ஆபிரகாமுக்கு தேவன் தோன்றிய தருணங் களைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். தேவன் ஆபிரகாமுக்கு எட்டு முறை தரிசனமளித்தார். அவரே உறவை ஆரம்பித்தார், இது தேவனோடுள்ள ஒவ்வொரு உறவைப்பற்றியும் உண்மையாயிருக் கிறது. ரோமர் 3:11-இல், பவுல் எந்த மனிதனும் தேவனைத் தேடவில்லை என்று சொல்லுகிறார். தேவனே மனிதனைத் தேடுகிறார். ஒரு மனிதன் தேவனைத் தேடுவது போல் தோன்றினால், அவனைத் தேடும் தேவனுக்கு அவன் பதிலளிக்கிறான். அப்பொழுது தேவன் உறவைத் துவங்குகிறார்.

மனிதனை நோக்கிய பக்கத்தின் உறவில் அல்லது தேவனுக்கு ஆபிரகாம் அளித்த பதில் ஆபிரகாம் கட்டிய நான்கு பலிபீடங்களின் வடிவத்தில் வருகிறது. முதல் பலிபீடம் மோரே என்னும் சம பூமியில் கட்டப்பட்டது (12:7). மோரே என்ற வார்த்தைக்கு அர்த்தம் ''போதிப்பது அல்லது தேடுவது''. ஆபிரகாமின் இந்த முதல் பலிபீடத்தை நான் ''மறுமொழி பலிபீடம்'' என்றழைப்பேன். ஏனென்றால் அவனை வனாந்தரத்துக்கு அழைத்த தேவனுக்கு மறுமொழியாக அது கட்டப்பட்டது.

அவனுடைய இரண்டாவது பலிபீடம் ஆயீக்கும் பெத்தேலுக்கு மிடையில் கட்டப்பட்டது. எபிரெய மொழியில் பெத்தேல் என்றால் ''தேவனுடைய வீடு'' என்று அர்த்தம். இந்த இடத்தில் தேவனுக்கு ஒரு வீடு இல்லாமலிருந்ததால், இந்தச் சொல்லுக்குப் பொருள் ''தேவன் இருக்கும் இடம்'' என்ற அர்த்தமுடையதைப் போல் தோன்றுகிறது. ஆயீ என்றால், ''அழிவு, துன்பம், குழிகள்'' என்ற அர்த்தமுடையது. ரோமர் 6:23 ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்று சொல்லுகிறது, இதையே இந்தப் பட்டணத்தின் பெயர் குறிப்பிடுகி றது. ஆயீக்கு கிழக்கே அப்பால் சோதோமும் கோமோராவும் இருக்கின்றன. தம்முடைய முதல் பலிபீடத்தில் ஆபிராம், ''எனக்குப்



போதியும்'' என்று சொல்லுகிறார். இந்த இரண்டாவது பலிபீடம், தேவன் தனக்குப் போதித்ததற்கு எப்படிப் பதிலளிப்பது என்று இன்னும் தீர்மானிக்கப் படவில்லை என்று காட்டுகிறது.

ஆபிராம் இந்த இரண்டாவது பலிபீடத்தை விட்டு பூமிசாஸ்திரப்பிரகாரமும் ஆவிக்குரிய பிரகாரமும் தெற்கே போகிறான். அவன் தன்னுடைய மனைவியிடம், எகிப்திய மனிதர் அவனைக் கொண்டு போகாமல் அல்லது கொன்று விடாமலிருக்க அவளைத் தன் சகோதரி என்று சொல்லச் சொன்னான். அவன் ஏராளமான துன்பங்களைச் சந்தித்ததால் அவற்றிலிருந்து ஆவிக்குரியபடி அவன் வெளியே வந்ததுபோல் தோன்றுகிறது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, ஆபிராம் திரும்பவும் இரண்டாம் பலிபீடத்திற்கு வந்து தேவனைக் கூப்பிட்டான். அந்த இருதயப் பூர்வமான ஆராதனைக்குப்பின், லோத்துவிடம் தாங்கள் இருவரும் பிரிந்து செல்லுவது நல்லது என்று தெரிவித்தான். அவர்கள் எதைப் பற்றி பேசினார்கள் என்று வேதவாக்கியங்கள் கூறவில்லை, ஆனால் ஒருவேளை தேவன் லோத்தை அவனோடு கூட்டிச்செல்ல வேண்டாம் என்று கூறியிருக்கக்கூடும். பின்னர் லோத்து சோதோம் கோமோரா பாவச் சம்பவத்தில் ஆக்கிரமிக்கப்பட்டதால் ஏன் என்று நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது.

லோத்து கிழக்காகப் போனான், ஆபிராம் மேற்காகப் போய் எபிரோன் என்ற இடத்தில் தம்முடைய மூன்றாவது பலிபீடத்தைக் கட்டினார். எபிரோன் என்ற சொல்லுக்கு ''தோழமை'' என்று அர்த்தம். இந்தப் பெயருங்கூட அடையாளப்பெயர் என்று நான் நம்புகிறேன். முதல் பலிபீடம் ''எனக்கு போதியும்'' என்று சொன்னது, இரண்டாவது பலிபீடம் ''எனக்கு நிச்சயமாகத் தெரியாது''அல்லது ''நான் இவர்களுக்கு இடையே இருப்பவன்'' என்று சொன்னது. இந்தப் பலிபீடம் ''தேவன், நான் உம்மைத் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டதால், இதை நான் ''உறவின் பலபீடம்'' என்று அழைக்கிறேன்.

ஆபிரகாமின் கதை காணப்படும் 12,13 அதிகாரங்களில் அவன் மூன்று பலிபீடங்களைக் கட்டினான். 22-ஆம் அதிகாரத்தில் மட்டும் இன்னொரு பலிபீடத்தை அவன் கட்டவில்லை. மூன்றாம் பலி

பீடத்துக்கும் நான்காம் பலிபீடத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் என்ன நேரிட்டது?

ஆபிரகாம், ''தேவனே உம்மைப்பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கூறியபொழுது, தேவன், ''ஆபிரகாமே, என்னோடு, உனக்கு உறவு இருக்க வேண்டுமென்று நீ விரும்பினால், நீ ஒரு காரியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். நான் எது வாயிருந்தாலும் எல்லாமாயிருக்கிறேன். நான் எல்லாமானவர் என்று நீ கண்டு கொள்ளும்வரையில், என்னை நீ எதுவுமாகக் கண்டுகொள்ள மாட்டாய்'' என்றார். ஆபிரகாமின் வாழ்க்கை அவன் விட்டுவிட விரும்பாத மற்ற காரியங்களினால் நிறைந்திருந்தது.

அதிகாரம் 16-இல், ஆபிராம் தனக்கு சந்தானம் அளிப்பதாக தேவன் கொடுத்த வாக்குறுதியை எப்படி தேவன் நிறைவேற்றுவார் என்று (ஆபிராமும் சாராயும்) கவலைப்படுவதை நாம் காண்கிறோம - எனவே அவருக்கு உதவிசெய்ய அவர்கள் தீர்மானித்தார்கள். அவனுடைய மனைவியின் புத்திமதிப்படி ஆபிராம் அவளுடைய எகிப்திய அடிமைப்பெண் ஆகாருடன் உறவு கொண்டான் (1-4). இதனால் பிறந்த மகன் இஸ்மவேல். இவர் வழி வந்தவர்கள் அரபியர்கள். தேவன் அவனுடைய உதவியை தேவன் நாடினார் என்று ஆபிராம் தீர்மானிக்காவிட்டால், இன்றைக்கு மத்திய கிழக்கு பிரச்சினை இருந்திருக்காது.

ஆபிரகாமுக்குத் தேவனோடுள்ள உறவில் இன்னொரு வகையான பிரச்சினை சாராள் என்று நான் நம்புகிறேன். மூன்றாவது பலிபீடமான உறவின் பலிபீடம், செங்குத்தான உறவையும் படுக்கை மட்டமான உறவையும் பற்றியது. அவைகள் பிரிக்க முடியாதவை. ஆபிரகாம் தேவனை அறிந்து கொள்ள வேண்டுமானால், ஆபிரகா முடைய எல்லா உறவுகளிலும் தேவன் தம்முடைய சரியான இடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆபிரகாமிடம் லோத்தைப் பற்றிப்பேசி, அவருடைய வாழ்க்கையிலிருந்து லோத்தை வெளி யேற்ற வேண்டியிருந்தது. நம்முடைய வாழ்க்கையில் நாம் ஏற்றுக் கொள்ளும், ஆனால் தேவனுக்கு விருப்பமில்லாத மக்களை லோத்து சித்தரிக்கிறார். அவனுடைய வாழ்க்கையிலிருந்து இஸ்மவேலையும் நீக்கிவிட வேண்டியிருந்தது. தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி, இஸ்மவேலை அனுப்பிவிடும்படிச் சொன்னார். ஆபிரகாமின்



வாழ்க்கையில் முதலிடத்துக்காகப் போட்டியிடும் ஒவ்வொரு வரையும் தேவன் வேரோடு அகற்றுகிறார்.

சாராள் இன்னொறு வகையான பிரச்சினை. தேவனால் நம்முடைய வாழ்க்கைகளில் புகுத்தப்பட்டு, அவர்களை நாம் தேவனுடைய ஏற்பாடு என்று தெரிந்துகொள்ளாத மக்களைப்பற்றிய ஒரு சித்திரம் சாராள். சாராளைப்பற்றி இரண்டு முறை தேவன் ஆபிரகாமுக்கு தோற்றமளிக்க வேண்டியிருந்தது. இரண்டாவது முறை அவர், ''உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக, சாராள் என்பது அவளுடைய பெயராயிருக்கும். நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்'' (17:15,16) என்று சொன்னார். ஆபிரகாம் இதைக் கேட்டபோது முகங்குப்பற விழுந்து சிரித்தான்! இந்தச் செய்தியை சாராள் கேள்விப்பட்டபோது, அவளும் நகைத்தாள்!.

ஒரு ஆண்டுக்குப்பின், ஆபிரகாமுக்கு சாராளுக்கும் ஒரு பிள்ளை பிறந்தது. இந்த மகனை ஈசாக்கு என்று அழைக்கும்படி தேவன் அவர்களிடம் சொன்னார். எபிரெய மொழியில் இதன் அர்த்தம் ''சிரிப்பு'' என்பதாகும். தேவன் என்ன செய்யப் போகிறார் என்று சொல்லியபோது, அவர்கள் சிரித்தார்கள் என்பதை இந்த ''விசுவாச வீரர்கள்'' ஒருபொழுதும் மறக்கக் கூடாது என்று தேவன் விரும்பினார்.

கடைசியாக, ஈசாக்கு ஒரு இளைஞனான போது, ஆபிரகாம் தன்னுடைய நான்காவது பலிபீடத்தைக் கட்டினார், இந்தப் பலிபீடம் மிகவும் முக்கியமானது. அது மோரியா மலையில் கட்டப்பட்டது. மோரியா என்றார் ''யெகோவா அளிப்பார்'' என்று அர்த்தம். ஆபிரகாம் மேலே அந்த இடத்தைக் கண்டுபிடித்துவிட்டான், இந்த நான்காவது பலிபீடம் வித்தியாசமானது. இந்த முறை தேவன் இடத்தைத் தெரிவு செய்தார், இந்த முறை தேவன் பலியின் பெயரைச் சொல்லுகிறார் - ஈசாக்கு.

ஈசாக்கு ஆபிரகாமுக்கு சாராளுக்கும் முதிர் வயதில் பிறந்த ஒரே மகன் என்பது மட்டுமல்ல, இருபத்தைந்து ஆண்டு கால விசுவாசத்தின் நிறைவேற்றமுங்கூட, இப்பொழுது தேவன் பகுத்தறிவுக்கு எதிராக ''எனக்கு அவன் வேண்டும்'' என்று சொல்லு கிறார். ஆபிரகாம், தேவன் கேட்டதைப் பின் தொடர்ந்து நடுக்கத்துடன் சிறுவனை மலைக்குக் கூட்டிச் சென்றான். ஆனால்

கடைசி நிமிஷத்தில், அவன் தனக்குக் கீழ்ப்படிந்ததைக் கண்டபோது, ஈசாக்கின் உயிருக்குப் பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியை தேவன் கொடுக்கிறார் (22:1-19). ஆபிரகாம் அந்த இடத்தை யேகவோயீரே என்றழைத்தான். இதன் அர்த்தம் ''யேகோவா அளிப்பார்'' ஆபிரகாமின் பலிபீடங்கள் மூலமாக தேவன் தெரிந்தெடுத்த மலையில், ''தேவனுக்கு முதல்'' என்ற பலிபீடத்தில், இருபத்தைந்து ஆண்டு விசுவாசத்தை தேவன் நிறைவேறச் செய்தார். இந்த நான்காவது பலிபீடத்தில் ஆபிரகாம் ஈசாக்கை பலியாகக் கொடுக்கவில்லை. ''தேவனுக்கு முதல்'' என்ற பலிபீடத்தில் ஆபிரகாம், ஆபிரகாமையே பலியாகக் கொடுத்தார்.

வேதாகமத்தின் செய்தியை இரண்டு வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்லலாம்: ''தேவனுக்கு முதலிடம்''. இது எளிதான தீர்மானமல்ல; ஆனால் அது சிக்கலானதுமல்ல. அவர் உங்களின் தேவனாயிருக்கிறார் அல்லது இல்லாமலிருக்கிறார். கடைசியாக, ஆபிரகாமுக்கு அவர் தேவன்.

## அத்தியாயம் 10

## நீ யார்?

யாக்கோபின் கதை நம்பமுடியாத ஒரு கதை. யாக்கோபு என்றால் ''பற்றிப்பிடிப்பவன்'', என்று அர்த்தமாகும். ஏனென்றால் அவனும் அவனுடைய இரட்டை சகோதரனும் பிறந்தபொழுது அவன் தன்னுடய சகோதரனின் காலைப் பற்றிப்பிடித்திருந்தான். அவன் தன்னுடைய குடும்பத்தில் பெற்றுக் கொள்ளத் தக்க நல்ல இரண்டு காரியங்கள் இருந்தன. அவன் அந்த இரண்டு காரியங்களையும் பற்றிப்படித்துக் கொண்டான். பிறப்புரிமை மூத்த மகனுக்குக் கிடைக்க வேண்டிய பரம்பரைச் சொத்தாகும். ஆசீர்வாதம் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தது. இது இவர்களுடைய தகப்பன் ஈசாக்குக்குத் தாண்டிச் சென்று, அதன்பின் மூத்த மகனுக்குக் கொடுக்கப்பட்ட வேண்டியது என்றாகும். யாக்கோபின் சகோதரன் ஏசா தன் பிறப்புரிமையை பயிற்றங்கூழுக்கு விற்றுப் போட்டான், யாக்கோபு தன்னுடைய தகப்பனை ஏமாற்றி அவனிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். இப்படி யாக்கோபு



பிறப்புரிமையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டபின் அவனுடைய அம்மா அவனிடம் வந்து, ''உன் சகோதரனாகிய யாக்கோபு உன்னைக் கொன்று போட நினைத்து, தன்னை தேற்றிக் கொள்ளுகிறான்....என் சகோதரனாகிய லாபானிடத்துக்கு ஓடிப் போய் உன் சகோதரனின் கோபம் தணியுமட்டும் சில நாள் அவனிடத்திலே இரு'' (27:42-44) என்று சொன்னாள்.

வீட்டைவிட்டு வெளியேறிய யாக்கோபு முதல் இரவில் ஒரு கனவு கண்டான். இந்தக் கனவில் ஒரு ஏணியில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களாகவுமிருந்ததைக் கண்டான். இந்தக் கனவில் தேவன் அவனுக்குத் தோற்றமளித்து, யாக்கோபின் பாட்டனாராகிய ஆபிரகாமோடு தான் செய்த உடன்படிக்கையை உறுதி செய்தார். தேவன் அந்தத் திட்டத்தில் யாக்கோபை ஒரு பகுதியாக்கு வதாக வாக்களித்தார். மேலும் அவர், ''நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை'' என்றார் (28:15).

யாக்கோபு நித்திரை தெளிந்து ஆச்சரியத்தோடு எழுந்தான். ''மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்'' என்றான் அவன் (16). தன் பயணத்தைத் துவங்குமுன், தனக்குத் தலை யணையாய் வைத்திருந்தக் கல்லை எடுத்து அதன் மேல் எண்ணெய் வார்த்து, தேவன் அவனுக்குக் கொடுக்கும் எல்லாவற்றிலும் தசம் பாகம் கொடுப்பதாகப் பொருத்தனை பண்ணிக் கொண்டான் (18-22).

### யாக்கோபின் போராட்டம்

அடுத்து நடந்தது யாக்கோபின் கதையின் பிரதானப் பகுதி தன்னுடைய மாமா லாபபனோடு இருபது ஆண்டுகள் மிகக்கடினமாக வேலை செய்த பின், தேவனோடு கூட ஆவிக்குரிய அனுபவம் யாக்கோபுக்கு ஏற்பட்டது. அந்த அனுபவம் ஆதியாகமம் 32-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது:

''யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு அவனுடைய தொடைச் சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கிற்று. அவர் நான் போகட்டும், பொழுது

விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றார். அவர்: உன் பெயர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான். அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார். அப்பொழுது யாக்கோபு: உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார். அப்பொழுது யாக்கோபு நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர்தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பேரிட்டான்'' (24-30).

தேவன் யாக்கோபிடம் கேட்ட கேள்வியைக் கவனியுங்கள்: ''உன் பேர் என்ன?'' நாம் ஏற்கெனவே கண்டுகொண்டபடி வேதாகமக் காலத்தில் பெயர்களுக்கு முக்கியத்துவம் இருந்தது. அவர்கள் யாருக்கு சொந்தமானவர்கள் என்பதைப் பற்றி சொல்லுகின்றன, அவைகள் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள உதவுகின்றன. இந்தக் கேள்வியினால் தேவன் யாக்கோபின் பெயர் தெரியாமல் அதைக் கேட்கவில்லை. அவர் உண்மையாகக் கேட்டது, 'நீ யார்?'' என்று. அதன் பதில் அவருக்குத் தெரிய வேண்டிய அவசியம் நிச்சயமாய் அவருக்கில்லை, ஆனால் அவர் கேட்டது யாக்கோபு அதன் பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். யாக்கோபு என்ற பெயர், நாம் முன்னே பார்த்தபடி,''பற்றிப்பிடித்தவன்'' என்ற அர்த்தமுடையது. ஆனால் அவனுடைய புதிய பெயர் இஸ்ரவேல், அவனுடைய வழித் தோன்றுபவர்கள் எல்லாரும் தாங்கும் பெயர் ''போராடுபவன்'' என்பதாகும்.

நாம் கவனிக்காமல் விட்டு விடக் கூடாத இன்னொரு முக்கியத்துவம் இந்தக் கதையில் இருக்கிறது. நான் அதை ''முடமாக்கி வெற்றியளித்த ஆசீர்வாதம்'' என்றழைக்கிறேன், ஏனென்றால் தேவன் யாக்கோபை முறிக்கும் வரையில் அவனை ஆசீர்வதிக்க முடியாத ஒரு அயோக்கியனாக யாக்கோபு இருந்தான்.

சிலவேளைகளில் தேவன் வேறு எந்த வழியிலும் நம்மைக் கடந்து சொல்ல முடியாது என்பதால் அவர் நம்மை ஏதாவது ஒரு வழியில் முடமாக்கி, நாம் அவரைச் சார்ந்திருக்கும்படி கட்டாயப்



படுத்துகிறார். யாக்கோபோடு இப்படியே நடந்தது. கடைசியில் யாக்கோபு அந்தச் செய்தியைப் பெற்றுக் கொண்டான். கடைசியாக அவன் ஏசாவை சந்தித்தபோது, அவன் அவனோடு சண்டை யிடவில்லை - அவன் கழுத்தைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டான். அவன் தன் சகோதரனிடம், ''தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்'' (33:11) என்பதால் தனக்கும் மனைவிக்கும் பிள்ளைகளும் மந்தைகளும் இருக்கின்றன என்று சொன்னார். அவைகளை அவன் பற்றிப்பிடித்துக் கொண்டதால் அல்ல, ஆனால் தேவனுடைய கிருபையினால் இருந்தன. நாம் பெற அருகதையற்ற ஆசீர்வாதங் களை தாராளமாகக் கொடுக்கும் தேவனுடைய பண்பு தான் கிருபையாகும். தேவனுடைய கிருபை நாம் அடைய வேண்டிய தண்டனையிலிருந்து நம்மைத் தப்புவித்தது.

நம்மை தேவனுக்கு ஒப்படைக்க வேண்டும் என்பதையும் அவர் நமக்குப் போதிக்கிறார். நம்மை ஆசீர்வதிப்பதற்காக நம்மை உடைப்பதை சில நேரங்களில் அவர் தெரிந்து கொள்ளுகிறார். நாம் யாராயிருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ள நாம் மூன்று இடங்களைப் பார்க்க வேண்டும். முதலாவதாக, நாம் மேலே நோக்கிப் பார்க்க வேண்டும். வேதாகமக் கதைகள் முழுவதிலும், மக்களை மேலே பார்க்கச் செய்ய தேவனுக்கு அதிக காலம் தேவைப்படுகிறது என்று நாம் கற்போம், காண்போம். நாம் யாராயிருக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் கட்டாயம் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும். எப்படியிருந்தாலும் தேவனே நம்மை உருவாக்கியவர். நம்முடைய வாழ்க்கைகளுக்கான வரைபடத் திட்டத்தை அவர் வைத்திருக்கிறார்.

அடுத்ததாக, நாம் உள்ளாகப் பார்க்க வேண்டும். சங்கீதம் 139-இல் தாவீது, ''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியில் என்னை நடத்தும்'' (23-24). நாம் தேவனிடம், அவர் நம்முடைய இருதயங்களைப் பார்த்து, நாம் யாராயிருக்க வேண்டுமேன்று அவர் விரும்புகிறார் என்று கேட்க வேண்டும்.

கடைசியாக, நாம் நம்மைச் சுற்றிப் பார்க்க வேண்டும். மேலாகவும் உள்ளாகவும் பார்த்த ஒருவர் இப்போது தன்னைச்

சுற்றிலும் பார்த்து மக்களுக்கு தேவனுடைய திட்டத்தை அறிவிக்க வேண்டும். எப்பொழுதாவது மேல் நோக்கிப் பார்த்திருக்கிறீர்களா? உங்களுடைய இருதயத்தின் நிலையைக் காண அடிக்கடி உள்நோக்கிப் பார்த்திருக்கிறீர்களா? உங்களுடைய வாழ்க்கையில் மக்களோடு எப்படி உறவு கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புவதைக்காண உங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறீர்களா?

## அத்தியாயம் 11

## தேவனுடைய அதிகார வரம்புக்குள் இருக்கின்றன

நமக்கு விசுவாசத்தைப் பற்றிப் போதித்த ஆபிரகாமைப் பற்றி இப்போது ஆய்வு செய்தோம். தேவனுடைய கிருபையை நமக்குக் காட்டிய யாக்கோபைப் பார்த்தோம். இப்போது ஆதியாகமத்தின் கடைசி 14 அதிகாரங்களிலும் காணப்படும் யோசேப்பின் கதைக்கு வருகிறோம். வேதவசனங்களில் யோசேப்பு ஒரு மிகவும் தூய்மையான கதாபாத்திரங்களில் ஒருவர் என்று தோன்றுகிறது. வேதாகமத்தின் அநேக கதாபாத்திரங்களின் பலவீனங்களையும் பலங்களையும் தேவன் நமக்குக் காட்டுகிறார், ஆனால் யோசேப்பு இந்த விதிகளுக்கு ஒரு விதிவிலக்கு (மற்றொருவர் தானியேல், இவரைப் பற்றிப் பின்னால் நாம் ஆய்வு செய்வோம்).

### யோசேப்பின் கதை

யோசேப்பினுடைய கதை, உண்மையில் தெய்வ அனுக்கிரகம் பற்றிய கதை. இந்தக் கதையின் உண்மைச் செய்தி புதிய ஏற்பாட்டின் ரோமர் 8:28 வசனத்தில் காணப்படுகிறது: ''அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.'' யோசேப்பின் சகோதரர்கள் அவன் யார் என்று கண்டு கொண்டதும் திகைப்பும் அச்சமுமடைந்தனர், ஆனால் அவன் ஆறுதலான வார்த்தைகளைப் பேசி எல்லாம் தேவனுடைய கிரியை என்று கூறி சகோதரரோடு ஊக்கமளிக்கும் வார்த்தைகளைப் பேசினான்:



''என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக் கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும் படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்...பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப் பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி... வைத்தார்'' (ஆதியாகமம் 45:5,7,8).

யோசேப்பின் தகப்பனாகிய யாக்கோபின் வாழ்க்கையில் நன்றாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மனிதனின் கதையைப் பார்த்தோம். ஆனால், அது அவனால் ஏற்படுத்தப்பட்டதல்ல. எல்லா நேரத்திலும் தேவன் உண்மையில் தம்முடைய யாக்கோபை கண் காணித்துக் கொண்டார். யோசேப்பும் இதே உண்மையை, வேறொரு கோணத்தில் எடுத்துக் காட்டுகிறார். அவருடைய கதையில் ஒரு மனிதனுடைய வாழ்க்கை, ஒரு காலம் வரை நன்றாக அமைந்ததாகத் தோன்ற வில்லை. அவருடைய சகோதரர்களால் அவர் அடிமையாக விற்கப் பட்டார்; அநியாயமாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்; அவருக்கு உதவி செய்வதாக வாக்களித்தவர்கள் அவரை மறந்து விட்டார்கள். ஆனால் இந்தச் சூழ்நிலைகளும் அவருடைய சொந்த நடவடிக்கைகள்மூலம் வந்ததல்ல. அவர் மிகவும் கடினமான பிரச்சனைகள் மற்றும் சூழ்நிலைகள் வழியாகப் போய்க் கொண்டிருந்தார், அவர் அவைகளை அனுபவிக்க வேண்டிய தில்லை, ஆனால் தேவன் மகிமைப் படுத்தப்படவும், அவருடைய திட்டம் நிறைவேறவும் இப்படி நடந்தன.

### இன்றைக்கான செயல்முறைப்படுத்துதல்

நம்முடைய வாழ்க்கையில் செயல்முறைப்படுத்தக் கூடிய அநேகக் காரியங்களை இந்தக் கதை கூறுகிறது. முதலாவதாக, யோசேப்பு தன்னுடைய தகப்பனிடமும், சகோதரர்களிடமும் வைத்திருந்த உறவுகளைச் சிந்தித்துப் பாருங்கள். அவைகள் சரியான மாதிரியான உறவுகளிலிருந்து அப்பாற்பட்டவை! யாக்கோபு ஒரு இலட்சிய தகப்பன் அல்ல. அவர் யோசேப்பிடம் பாரபட்சமாய் நடந்து கொண்டது, அவருடைய மகனுக்கு சந்தோஷத்தைவிட அதிக

துக்கத்தையே கொண்டு வந்தது. நிச்சயமாக மற்ற குமாரர்களிடமும் அவர் நியாயமாக நடந்து கொண்டிருக்கலாம். நம்மில் யாருக்கு பூரணமாக பெற்றோர்கள் இருக்கின்றனர்? நம்மோடு பிறந்தவர் களோடு நம்மில் எத்தனை பேருக்கு சரியான உறவுகளிருக்கின்றன? நம்முடைய குடும்பத்தை நாம் தெரிந்து கொள்ளவில்லை, எனினும் அதன் அங்கத்தினர்களே நம்முடைய வாழ்க்கையை வடிவமைத் தவர்கள். நம்மில் அநேகருக்கு இந்த உறவுகளால் மனவேதனையும் கடினங்களுமே வாழ்க்கையில் ஏற்பட்டன. ஆனால் யோசேப்பின் கதையில் நமக்குக் கிடைக்கும் செய்தி: நம்முடைய வாழ்க்கைகளின் சூழ்நிலைகளை தேவனே ஆளுகிறார், அவரால் மீட்க முடியாததும், அவைகளிலிருந்து நன்மை பெற முடியாததுமான எந்தச் சூழ்நிலையுமில்லை. உங்கள் பெற்றோர் கடமை தவறுபவர்களாக இருக்கும் போதுகூட தேவனால் அவர்கள் மீது தம் செல்வாக்கைச் செலுத்த முடியும். உங்கள் சகோதரரும் சகோதரிகளும் கடமையில் தவறுபவர்களாக இருக்கும் போதுங்கூட தேவன் தம்முடைய செல்வாக்கைச் செலுத்த முடியும். மேசியா இந்த உலகத்தில் வருவதற்காகத் தெரிந்தெடுக்கப்படக் குடும்பத்தைப் பட்டினியி லிருந்து காப்பாற்ற, தெய்வாதீனமாக யோசேப்பை எகிப்தில் அமர்த்த, யோசேப்பின் துன்ப நிலையை தேவன் பயன்படுத்தினார். உங்களுடைய வாழ்க்கையையும் வடிவமைக்க சரியாகச் செயல்படாத உங்கள் குடும்பத்தின் கஷ்டங்களை தேவன் பயன்படுத்த முடியும். தேவன் உங்களுக்கு அமைத்த கதாபாத்திரத்தை ஏற்கும்படி உங்களை ஆயத்தப்படுத்த, உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளை எப்படித் தெய்வதீனமாக ஏற்படுத்துகிறார் என்று ஒருநாள் நீங்கள் கண்டு கொள்ளுவீர்கள்.

## அதியாயம் 12

## ஆதியாகமம் முடிவடைகிறது, யாத்திராகமம் ஆரம்பிக்கிறது

நாம் வேதாகமத்தை ஆய்வு செய்யும் பொழுது, குறிப்பாகப் பழைய ஏற்பாட்டை மேற்பார்வையிடும்போது, இந்த மக்கள் ஒரு சிறப்பான ஜாதியாக வளர்ச்சியடைவதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆதியாகமப் புத்தகத்தில் இந்த மக்கள் ஆபிரகாம்



மூலமாகப் பிறந்தவர்கள் என்று வாசிக்கிறோம். யாக்கோபு அவர்களுக்கு இஸ்ரவேல் என்ற பெயரைக் கொடுத்தான், யோசேப்பு அவர்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றினான். ஆதியாகமப் புத்தகம் முடியும்போது, இந்த ஜாதிக்கு பன்னிரெண்டு குடும்பங்கள் இருந்தன, இந்தக் குடும்பங்கள் எகிப்திலிருந்தன.

யாத்திராகமம் துவங்கும்போது, இந்த மக்கள் இன்னும் ஒரு ஜாதியாகவில்லை, அவர்கள் பன்னிரெண்டு கோத்திரங்களிலிருந்து திரளாக பலகிப் பெறுகியிருந்தனர். அவர்கள் ஒரு ஜாதியாகுமுன் அவர்களுக்கு ஒரு தலைவர் தேவைப்பட்டது. யாத்திராகமப் புத்தகம் தேவனுடைய மக்களின் வரலாறு முழுவதிலும் மிகப் பெரிய தலைவரான மோசேயைப் பற்றி நமக்குச் சொல்லுகிறது.

இந்த மிகப் பெரிய அடிமைத் திரளை வழி நடத்துவதில் மோசேக்கு இருந்த மிகப் பெரிய பிரச்சனைகளில் ஒன்று, அவர்களுக்குச் சட்டம் எதுவுமில்லை. எந்த விதிமுறைகளுமில்லை. இந்த மக்களை ஆட்சி செய்ய அவனுக்கு எந்த அமைப்புமில்லை. மேலும் இந்தப் புத்தகத்தில், நூற்றுக்கணக்கான கட்டளைகளை பத்து கற்பனைகளாக அடக்கி, தேவனால் மனிதனுக்குக் கொடுக்கப் பட்டதைக் காண்போம்.

மோசேக்கு இன்னொரு பிரச்சினை இருந்தது: அவனுக்குச் சரியான மக்கள் இருந்தனர், ஆனால் அவர்கள் தவறான இடத்தில் இருந்தார்கள். அவர்கள் எகிப்து தேசத்தில், அடிமைத்தனத் திலிருந்தார்கள் தேவன் அவர்கள் சுதந்தரமாயிருக்க விரும்பினார். யாத்திராகமம் என்பதின் உண்மையான அர்த்தம், ‘‘வெளியேறும் வழி’’ என்பதாகும். இந்தப் புத்தகத்தின் பெரும் பகுதி, இஸ்ரவேலர்கள் அடிமைத்தனத்திலிருந்து தாங்கள் ‘‘வெளியேறும் வழி’’ யைக் கண்டு பிடிப்பதைப் பற்றிய கதையை உள்ளடக்கியது.

யாத்திராகம புத்தகத்தை வரலாறு என்பதை விட ஒரு உருவகக் கதையாகக் காணலாம். இஸ்ரவேலர் உண்மையில் அடிமைத்தனத்தில் இருந்தார்கள்; கிறிஸ்து இல்லாவிடில் பாவத்தின் அடிமைத்தனத்தில் நாம் இருக்கிறோம். யாத்திராகமம் இஸ்ரவேலர்கள் தங்கள் சரீரப்பிரகாரமான கட்டிலிருந்து வெளியே வரும் பிரச்சனையைப் பற்றிச் சொல்லுகிறது; வேதாகமம் அவர்களுடைய பாவத்துக்கான ஆவிக்குரிய கட்டுகளிலிருந்து எல்லா மக்களையும் வெளியேற்று வதானப் பிரச்சனையைப் பற்றிச் சொல்லுகிறது.

தேவன் உதவியால் பாவக்கட்டிலிருந்து நீங்கள் விடுவிக்கப் பட்டீர்களா? அடுத்த அத்தியாயத்தில் யாத்திராகமப் புத்தகத்தின் ஆய்வைத் தொடருவோம். நீங்கள் உங்களிடம் அந்த மூன்று முக்கிய மான கேள்விகளைக் கேட்டு, இப்பொழுது அதை வாசிக்கத் துவங்குங்கள்: ‘‘அது என்ன சொல்லுகிறது? அதன் அர்த்தம் என்ன? இதை எப்படி என் வாழ்க்கையில் செயல்படுத்த முடியும்?

## அத்தியாயம் 13

## ஒன்றுமில்லாதவரை, பெரியவராக்குவது

யாத்திராகமப் புத்தகத்தைப் புரிந்து கொள்ள, நீங்கள் அந்த மக்கள், அந்தப் பிரச்சனை, அந்தத் தீர்க்கதரிசி பற்றி புரிந்து கொள்ள வேண்டும். யாத்திராகமப் புத்தகம் தேவனுடைய மக்களையும், மோசேயின் தலைமையின் கீழ் எவ்வாறு அவர்கள் அடிமைத்தனத் திலிருந்து தப்பினார்கள் என்னபதையும் பற்றிய கதை.

### மூன்று முக்கிய செய்திகள்

நாம் பார்த்தபடி, யாத்திராகமம் என்பதின் அர்த்தம் ‘‘வெளியேறும் வழி’’ என்பதாகும். யாத்திராகமப் புத்தகத்திலுள்ள செய்தி உண்மையில் இதுவாகும்: இஸ்ரவேல் புத்திரரின் அடிமைத்தனத் திலிருந்து வெளியேறும் வழி என்ன? முதலாவதாக இந்த அடிமைத் தனத்திலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்ட கதை வேதாகமத்தின் மிகப் பெரிய அற்புதங்களில் ஒன்று.

இந்தப் புத்தகம் வரலாற்றை மட்டுமல்ல, நம்முடைய வாழ்வில் தியானத்துடன் செயல்படுத்தக் கூடிய அழகான உருவக சத்தியத்தையும் கொண்டது. அதாவது நாம் எல்லாரும் கூட அடிமைகள் தாம். நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ (want to) அதைச் செய்யவில்லை; நாம் செய்ய வேண்டியதைச்(have to) செய்கிறோம். செய்ய விரும்பியதைச் செய்யாமல் செய்ய வேண்டியதைச் செய்யும்போது, நாம் சுதந்தரமானவர்களல்ல. உங்களுக்குச் சுதந்திரம் இல்லாவிட்டால் நீங்கள் அடிமைகளாகவும் கூட இருக்கிறீர்கள், உங்களுக்குக் கூட அடிமைத் தனத்திலிருந்து தீர்வு காண வேண்டியிருக்கிறது. நம்முடைய பாவ அடிமைத்தனத்தி லிருந்து நாம் விடுதலை பெற வேண்டும். நமக்கு நன்கு தெரிந்த



‘இரட்சிப்பு என்ற வார்த்தை, பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்ட ‘விடுதலை’ என்ற வார்த்தைக்கு இணையான அர்த்தமுடையது. இரட்சிப்பு என்பது உண்மையில் பாவத்திலிருந்து விடுதலை பெறுவது. பாவத்தின் நிகழ்கால எதிர்காலத் தண்டனையிலிருந்து மட்டுமல்ல, பாவத்தின் சக்தியிலிருந்துங்கூட விடுதலை பெறுவது.

யாத்திராகமத்தில் நாம் மோசேயின குணாதிசயங்களைப் பற்றி ஆய்வு செய்வதிலும் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். வேதாகமத்திலுள்ள தெய்வ மனிதர்களைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து யோசனை செய்யும் போது, எல்லாருக்கும் மேலாக இந்த மனிதர் நிற்பதைக் காணலாம். வேதவசனங்களில் மோசே மிகப்பெரிய மனிதரென்று நான் நம்புகிறேன். நாம் முன்பு சொன்னது போல், ஆபிரகாம் தேவனுடைய பிள்ளைகளுக்குப் பிதாவாயிருந்தார், யாக்கோபு அவர்களுக்குக் பெயரிட்டார், யோசேப்பு அவர்களைக் காப்பாற்றினார். ஆனால் மோசே தேவனுடைய பிள்ளைகளுக்கு என்ன செய்தார் என்று சிந்தித்துப் பாருங்கள்! தேவனுடைய ஊழியத்தில் மோசேயின் பங்கு என்ன என்று யாத்திராகமப் புத்தகத்தில் இருந்தே அறிந்து கொள்கிறோம்.

### தேவனுடைய பணியில் மோசேயின் பங்கு

முதலாவதாக, மோசே அடிமைத்தனத்திலிருந்த இந்த மக்களுக்கு விடுதலையளித்தார். ஒரு அடிமையாயிருப்பது என்றால் என்ன என்று நம்மில் அநேகருக்குத் தெரியாது. மக்கள் சிறையி லிருக்கும்போது அவர்களை வாட்டிவதைக்கும் ஒரு காரியம் சுதந்திரமாயிருக்க வேண்டும் என்ற ஆசை. அவர்களுக்குச் சுதந்திரம் கொடுத்த பொழுது மோசே அந்த அடிமைகளுக்கு, மற்ற எல்லா வற்றையும் விட தேவைப்பட்டதைக் கொடுத்தார்: அரசாங்கம் அல்லது சட்டம்.

இந்த ஆவிக்குரிய ஆதிக்கத்தில் மோசே தேவனுடைய மக்களுக்கு விலைமதிப்பற்ற இரண்டு காரியங்களைக் கொடுத்தார்: அவர் தேவனுடைய வசனங்களைக் கொடுத்தார்; அவர் ஆராதனையைக் கொடுத்தார்.

மக்கள் வேதாகமம் முழுவதையும் வாசிக்கும்போது, குறிப்பாக குண இயல்பு பற்றிய ஆய்வுக்காக அவர்கள் ஆதியாகமப் புத்தகத்தை நன்றாக வாசிக்கிறார்கள். இதன்பின், எகிப்திலிருந்து விடுதலை

பெற்றதைச் சொல்லும் யாத்திராகம நாடகம் இருக்கிறது. இது சுமுகமாகச் சொல்லுகிறது. ஆனால் யாத்திராகமத்தின் கடைசி பகுதியிலிருந்து லேவியராகமத்தினுள் செல்லும்போது மக்கள் வருந்துகின்றதைக் காண்கிறோம். ஒரு கேயேட்டைப்போல் பலவித குறிப்புகளைக் காண்கிறோம். யாத்திராகமத்தின் இந்தப் பகுதியும் லேவியராகமம் முழுவதும் ஆராதனை செய்வதற்கான ஒரு கையேடாகும்.

நாம் தனியே விடப்பட்டால், எப்படி ஆராதனை செய்வது என்று நமக்குத் தெரியாது. அப்போஸ்தலர்கள் இயேசுவிடம் எப்படி ஜெபம் செய்ய வேண்டும் என்று கற்றுக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டது போல, இஸ்ரவேலர்களுக்கும் எப்படி ஆராதிப்பது என்று கற்றுக் கொடுப்பது அவசியமாயிருந்தது - நமக்கும் அது அவசிய மாகிறது. சபை ஆராதனை முறைகளில், போதகர் அதிக நேரம் தம்முடைய முகத்தைப் பலிபீடத்துக்கு நேராகவும், முதுகை மக்களுக்கு நேராகவும் வைத்திருக்கிறார். இந்தச் சபைகளும் யூத தேவாலயங்களும் தேவன் மோசேக்குக் கட்டும்படி கட்டளையிட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் ஆராதனை முறையை ஓரளவு பின்பற்றுகிறது.

மோசேயின் வாழ்க்கையை இந்த வழியில் பார்க்க நான் விரும்புகிறேன். யாத்திராகமப் புத்தகத்தின் பெரிய பிரச்சனை அடிமைத்தனப் பிரச்சனை. இதற்குத் தீர்வு விடுதலை பெறுவது. இஸ்ரவேல் புத்திரருக்கு தேவையான விடுதலையளிப்பவராக தேவன் மோசேயை அழைத்தார். செயல்படுத்தலில், யாத்திராகமப் புத்தகம் விடுதலை அல்லது இரட்சிப்புக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்குவது போல, மோசேயின் வாழ்க்கை விடுதலையளிப்பவராக எப்படி இருக்க முடியும் என்பதன் மிகப் பெரிய எடுத்துக் காட்டாயிருக்கிறது.

**மோசேயின் கதை**

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அனுபவிக்கக் கூடிய மிகப் பெரிய அனுபவம், நீங்கள் பாவத்தின் சக்தியிலிருந்து விடுவிக்கப் படுவதாகும். வாழ்க்கையின் இரண்டாவது மிகப் பெரிய அனுபவம், வேறு யாரையாவது விடுவிக்கும் ஒரு கருவியாக மாறுவது.

மோசேயின் வாழ்க்கையை மூன்று காலவரையாக ஒவ்வொன்றும் 40 ஆண்டுகளாலானதாக பார்ப்போம். முதல் 40



ஆண்டுகளில் தேவன் கற்பித்த முக்கியமான பாடம்,'' நீ ஒன்றுக்கும் உதவாதவன்'' என்பது.

சில அசாதாரண சம்பவங்களால், மோசே பார்வோனின் அரண்மனையில் வளர்ந்தான் (யாக்கோபு 1-2:10). ஒருவேளை இதனால் அவன் தான் சிறப்பாக ஒருவன் என்று எண்ணியிருக்கக் கூடும். ஆனால் அவனுக்கு நாற்பது வயதான பொழுது, தேவன் ஒரு சாதாரண மனிதன் என்று அவனுக்கு உணர்த்தியதுபோல் தோன்றுகிறது (2:11-15).

மோசேக்கு தேவன் கற்பித்த இரண்டாவது பாடம், அவனுடைய வாழ்க்கையின் இர்ணடாம் 40 ஆண்டுகளில் நடைபெற்றது. இந்த சமயத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்டச் செய்தி, ''மோசே, நீ குறிப்பிடத்தக்க ஒருவன் ஏனென்றால் நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். நான் உன்னோடுகூட இருக்கிறேன்,'' என்பதாகும். அவனுடைய முதலாவது நாற்பது வருட காலத்தில், ஒரு நாள் மோசே வெளியே போனபோது எபிரெய அடிமைகள் துன்பப்படுவதைக் கண்டான், தானும் ஒரு எபிரெய அடிமை என்பதை அவன் இப்பொழுது தெரிந்து கொண்டான். யாத்திராகமம் 2:11, ''மோசே பெரியவனான காலத்தில், அவன் தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமை சுமக்கிறதைப் பார்த்து, தன் எகிப்தியன் அடிக்கிறதைக்'' கண்டான், என்று காண்கிறோம். இந்த வசனப் பகுதி, அவன் அவர் களுடைய பாடுகளின் உணர்வைத் தானும் மிகவும் ஆழமாக உணர்ந்தான் என்பதைத் தெரிவிக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தேவன் முக்கியமாக மோசேயிடம் கூறியது, ''மோசே, இது நீ விடுவிப்பவனாக இருக்கும் வழியல்ல. நீ நாற்பது ஆண்டுகள் இந்த மக்களை எப்படி அவர்களின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பது என்பதைப் பற்றிப் படிக்க வேண்டி யுள்ளது,'' என்பதாகும். நாற்பது ஆண்டுகளுக்குப்பின், மோசே வனாந்தரத்தில் ஒரு முட்செடி எரிவதைக் கணடான். வனாந்தரத்தில் ஏற்படும் அதிக உஷ்ணத்தால் அங்கே ஏற்பட்ட அசாதாரண நிகழ்ச்சி அல்ல. பொதுவாக எரியும் செடிகள் சுமார் ஐந்து வினாடிகளுக்குள்ளாக சாம்பலாகிவிடும். எனினும், இந்த முட்செடி எரிந்து போகவில்லை, அது எரிந்து கொண்டேயிருந்தது. என்ன நடக்கிறது என்று பார்க்க மொசே அதை நெருங்கினான் (3:1-3). அடுத்து என்ன நடந்தது என்று கவனியுங்கள்.

பார்ப்பதற்காக அவன் ஒரு பக்கம் திரும்புவதைக் கர்த்தர் கண்டபொழுது, முட்செடியின் நடுவிலிருந்து தேவன், ''மோசே, மோசே!'' என்று அவனைக் கூப்பிட்டார். அவன், ''இதோ, அடியேன்'' என்றான். இப்போது அவர், ''இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். பின்னும் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப் பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக் கொண்டான்'' (4-6).

இந்தப் பகுதியில், இஸ்ரவேல் மக்களின் பயங்கர அடிமைத்தனத்தைப் பார்த்தது முக்கியமான காரியம் அல்ல என்று தேவன் மோசேயிடம் சொல்லுகிறார். இந்த அடிமைத்தனத்தைப் பற்றிய அவனுடைய மனதுருக்கமோ அல்லது ஏதாவது ஒன்று செய்ய வேண்டும் என்ற ஆவலோ முக்கியமான காரியம் அல்ல. எரியும் முட் செடியிலிருந்து தேவன் மோசேயிடம் தான் இந்தப் பிரச்சனையைக் கண்டு அதற்குத் தீர்வு காண முன் வந்திருப்பதே முக்கியமானது என்றார். ஆகையால், தேவன் மோசேயிடம், அவன் பார்வோனிடம் போய் இஸ்ரவேல் மக்களின் விடுதலைக்காக உரிமையுடன் கேட்டுப் பெற வேண்டும் என்று சொல்லுகிறார்.

இது மோசேக்கு எப்படிப் பட்ட அதிர்ச்சியாய் இருந்திருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? மோசே ஒரு எகிப்தியனைக் கொன்றபோது, இந்த மக்களை விடுதலை செய்வதில் தோல்வியடைந்ததால், தேவன் ஒரு சாதாரண மனிதன் என்று உணர்த்தினார். எரியும் முட் செடியில் தேவன் மோசே குறிப்பிடத்தக்க ஒரு மனிதன் என்று அவன் நம்பும்படிச் செய்தார். அடிப்படையில் இந்த இரண்டு பாடங்களும் - மோசே ஒரு சாதாரண மனிதன் என்பதும், தேவன் அவனோடிருக்கும்போது அவன் ஒரு சிறப்பான மனிதன் என்பதும் - தாழ்மையைப் போதிப்பதாயிருந்தது. இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவிக்கும் ஒரு பாத்திரமாக மோசேயை உருவாக்க தேவன் இந்த இரண்டு பாடங்களையும் போதித்தார்.

அதிகாரத்திலிருக்கும் அநேகர் முக்கியமான வேலைகளுக்காக அதிகக் கல்வி தகுதியுடையவர்களைத் தெரிந்தெடுக்க முயற்சி



செய்வார்கள். வேதாகமத்தில், குறைந்த தகுதியுள்ள ஒரு மனிதனைத் தெரிந்தெடுக்க முயற்சிப்பது போல் தோன்றுகிறது. இன்றைக்கு மக்களை விடுவிக்க நம்மைப் பயன்படுத்த தேவன் விரும்பினால், பாவத்தின் கட்டுகளிலிருந்து சில நண்பரை அல்லது நமக்கு அன்பான ஒருவரை விடுதலை செய்ய நீங்கள் விரும்பினால், இதை ஞாபகத்தில் வைத்திருங்கள்: நாம் விடுதலையளிப்பவர்களல்ல. தேவனே விடுதலையளிப்பவர்.

### நமக்கு ஒரு பாடம்

தாழ்மையான ஒருவர், உண்மையாகவே கிரியை செய்வது யார் என்று தெரிந்து கொள்ளுகிறார். தாழ்மையான ஒருவர், ''தேவனுடைய திட்டத்தின்படி, தேவனுடைய வல்லமையை தேவனுடைய மக்கள் மீது பயன்படுத்தி, தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவது தேவனுடைய திட்டம்'' என்று சொல்கிறார்.

யாத்திராகமப் புத்தகத்தில், தேவன் ஒரு திராட்சைக் கொடியைப் போல, தம்முடைய திராட்சைச் செடியின் கிளைகளைத் தேடுகிறார். தேவன் ஒரு கருவி இல்லாமல் கிரியை செய்யமாட்டார். இதனால் தேவன் தம்முடைய மோசேயைக் கண்டுபிடிக்க வேண்டும். அவர் தம்முடைய மோசேயை அழைத்ததும், அவனை நம்பச் செய்ய வேண்டும். அவர் அவனிடம், ''மோசே, நீ ஒரு சாதாரண மனிதன். நீ இதைச் செய்யப் போகும் நபரல்ல. நீ இந்த உண்மையைத் தெரிந்து கொண்டவுடன், மோசேயே, நான் உன் மூலமாகக் கிரியை செய்வேன். சாதாரண மனிதன் மூலமாக உன் மூலம் செய்ப் போகும் மிகப் பெரிய அற்புதத்தை நீ கண்டு கொள்வாய்'' என்றார்.

## அத்தியாயம் 14

## மனித எதிர்ப்புகளும், ஆவிக்குரிய இரகசியங்களும்

இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும் ஊழியத்துக்காக தேவன் எப்படி மோசேயை ஆயத்தப்படுத்தினார் என்று நாம் பார்த்தோம். இந்த ஆய்வில் அவனை எப்படி தேவனுடைய விடுதலையளிக்கும் பாத்திரமாக ஆக்கினார் என்று நாம் பார்ப்போம். இன்னும் விடுவிக்கும் ஒருவனாக செயல்பட தேவனுடைய அழைப்புக்கு எப்படி மோசே மறுமொழயளித்தான் என்பதையும் நாம் காண்போம்.

விடுதலையளிக்கும் பாத்திரமாக இருப்பதற்கான தேவனுடைய இரகசியங்களை ஒரே வாக்கியத்தில் சுருக்கமாகச் சொல்ல முடியும்: ''நீ விடுதலையளிப்பவன் அல்ல, அது நானே. உன்னுடைய சொந்த முயற்சியில் நீ யாரையும் விடுவிக்க முடியாது. ஆனால் என்னால் முடியும், நான் உன்னோடிருக்கிறேன். மோசே, நீ இந்த மக்களை விடுவிக்க வேண்டாம், நான் அதைச் செய்வேன். இந்த இரகசியங்கள் மோசேக்கு உண்மையாயிருந்தது, அவைகள் நமக்குங்கூட உண்மை யானவை. எரியும் முட்செடியில் தேவன் இவைகளை மோசேக்குப் போதித்தார்.

மோசே தன்னால் நன்றாகப் பேசி, பிறரைக் கவர முடியாதே என்று கவலைப்பட்டான். அவன் திக்கிப் பேசுவபனாக அல்லது தெளிவாகப் பேச முடியாதவனாயிருந்திருக்கலாம். அது எப்படியிருந் தாலும் தேவனுக்கு இதைப்பற்றி நிச்சயமாகத் தெரியும், எனினும் இதைப் பொருட்படுத்தாமல் பார்வோனிடம் போய் விடுதலை யளிக்கும்படி உரிமையுடன் கேட்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஒருவேளை அதன் காரணமாகவே தேவன் அவனைத் தெரிந்தெடுத்திருக்கலாம். இந்த விடுதலை நடந்தபோது அது அவருடைய வல்லமையேயன்றி, ஏதோ ஒரு மனிதனின் வசீகர சக்தியால் நடைபெற்றதல்ல என்று வெளிப்படையாகத் தெரிய வேண்டும் என்று தேவன் விரும்பினார். அதனாலேயே அவர் ஒரு எபிரெயனை, ஒரு மந்தைமேய்ப்பவனை, திக்கு வாயனை தம்முடைய மக்களை விடுவிக்கும்படி பார்வோனிடம் உரிமையுடன் கேட்க அவர் விரும்பியிருக்கலாம். தம்முடைய மக்கள் விடுவிக்கப் பட்டபொழுது, ''அதுவா, அந்த மோசே, அவன் சொற்பொழிவாற்றும் திறமையுடையவன். அவன் அந்த மக்களை விடுதலை செய்யும்படி அவன் கேட்டபொழுது நான் அங்கிருந்தேன்; மிக வல்லமையாகக் பேசி அவன் முடித்தான்'' என்று யாரும் சொல்லக் கூடாது என்று தேவன் விரும்பினார். அப்படியிருக்கக் கூடாது என்பதே தேவனு டைய விருப்பம். அதனால் அந்த மனிதனை அவர் தெரிந்தெடுத்தார்.

வசனம் 11-இல் உள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள், ''மனுஷனுக்கு வாயை உண்டாக்கியவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக் கியவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?''.



இந்தக் கேள்விகளை ஏற்றுக் கொள்ளுவது சிலருக்குக் கடினமாயிருக்கலாம். யோசேப்பின் வாழ்க்கையில் நாம் கண்ட அதே பாடத்தை தேவன் மறுபடியும் சொல்லுகிறார் என்று நான் நினைக்கிறேன்: உங்களுடைய வாழ்க்கையில் நிகழ்பவை யாவும் தேவனால் வடிவமைக்கப்பட்டவை. ஏன் என்று நீங்கள் ஒருபொழுதும் தெரிந்துகொள்ள முடியாது, ஆனால் தேவன், தாம் நினைத்த வழியிலேயே நம்மை உருவாக்குகிறார். தேவன் மோசேயிடம், ''எனக்கு சொல்திறனுடைய ஒரு மனிதன் வேண்டுமானால், நான் உன்னை சொல்திறனுள்ளவனாக ஆக்கியிருப்பேன்'' என்று சொல்லுகிறார்.

இங்கே தேவன் சிறிது கருத்துள்ள பாடத்தை அவனுக்குப் போதிக்கிறார். தேவன் அவனிடம், ''உன் கையிலிருக்கிறது என்ன?'' என்று கேட்கிறார். மோசே, ''ஒரு கோல்'' என்றான். தேவன், ''அதைத் தரையிலே போடு'' என்றார். மோசே அதைத் தரையிலே போட்டபொழுது, மோசேயின் ஊழியம் முழுவதிலும் வல்லமையாகத் தேவன் பயன்படுத்திய ஒன்றாக அது மாறிற்று. ''அர்ப் பணித்தல்''என்பது, சொற்படி ''கீழே வைப்பது'' தரையிலே வைப்பது என்ற அர்த்தமுடையது. பின்னர் தேவன் அவனது கையை அவன் மடியிலே போட்டு அதைத் திரும்ப எடுக்கச் சொன்னார். அவன் கையை வெளியே எடுத்தபோது குஷ்டரோகம் பிடித்திருந்தது. தேவன் கையை மறுபடியும் மடியில் வைத்துத் திரும்ப வெளியே எடுக்கச் சொன்னார், அவன் கை குணமாயிற்று (2-7).

மோசே எதிர்ப்புகளைக் கூறும்போது தேவன் மிகுந்த பொறுமையுடனிருந்தார். ஆனால் கடைசியாகத் தேவனிடம், ''ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயுடைய யாரையாகிலும் அனுப்பும்''(13) என்று சொன்னதும், கர்த்தருடைய கோபம் அவன்மேல் வீசும்படிச் செய்தான். தேவன் உன்னை ஒரு விடுவிப்பவனாக இருக்கும்படிக் கட்டளையிடும்போது, இதே எதிர்ப்புகளை நீங்கள் தெரிவிக்கிறீர்களா?

''வேறு யாரையாவது அனுப்பும், என்னையல்ல'' என்று சொல்லி விடுவீர்களா? வேதவசனங்களிலுள்ள அநேக மக்கள், ''தேவனே, எனக்கு விருப்பமில்லை'' என்று சொல்லக்கூடிய அளவுக்கு உண்மையைச் சொல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். அதைத்தான் மோசே சொல்லுகிறான்.

கடைசியில் மோசே போனான். அவன் வெற்றிபெற்றான். எனினும் வெற்றி அவனுடையதல்ல, அது தேவனுடையது. சில மக்களுக்கு அதிகத் திறமையிருக்கிறது, ஆனால் அதை உபயோகப் படுத்துவதற்கான வாய்ப்பு குறைவாயிருக்கிறது. சிலருக்குத் திறமை குறைவுபடுகிறது, ஆனால் அதைப் பயன் படுத்தும் வாய்ப்பு மிக அதிகமாயிருக்கிறது. உங்கள் திறமை குறைந்ததாகவோ அல்லது அதிகமானதாகவோ இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று வேத வசனங்கள் கூறுகின்றன. அவருக்காக நீங்கள் கொடுக்கும் நேரம் அதிகமாயிருக்க வேண்டும் என்பதே முக்கியம். தேவனுடைய கிரியையில் அவருக்காக நீங்கள் கொடுக் கும் நேரமே உங்கள் திறைமையை விட முக்கியமானது. நாம் யார், நாம் என்னவாயிருக்கிறோம் அல்லது நமக்கு என்ன வேண்டும் என்பதற்காக அவர் நம்மைப் பயன்படுத்தவில்லை, ஆனால் சரியாக இல்லாவிட்டால் கூட பொருட்படுத்தாமல் அவர் நம்மை பயன் படுத்துவார்.

தேவன் மோசேக்கு போதித்த முக்கிய சத்தியங்களை இந்தச் சிறிய கவிதையில் சுருக்கமாகச் சொல்லலாம்.

**ஆவிக்குரிய நான்கு இரகசியங்கள்**

நானல்ல, அவரே

அவரே அவர் என்னோடிருக்கிறார்.

என்னால் முடியாது, அவரால் முடியும்
அவர் என்னோடிருக்கிறார்.

எனக்கு வேண்டியதில்லை, ஆனால்
அவருக்கு வேண்டும். அவர் என்னோடிருக்கிறார்.

நான் செய்யவில்லை, அவரே செய்தார். ஏனென்றால் அவர் என்னோடிருந்தார்.

இந்த நான்கு வாக்கியங்களையும் நான் ''நான்கு ஆவிக்குரிய இரகசியங்கள்'' என்றழைக்கிறேன். இந்த ஆவிக்குரிய இரகசியங்களை நான் நேரடியாக என் வாழ்க்கையிலோ அல்லது ஊழியத்திலோ செயல்படுத்தாவிட்டால், ஒரு மனிதனாக அல்லது போதகராக என்னால் செயல்பட முடியாது. மோசே எரிந்து கொண்டிருந்த நான் அல்ல அவரே அவர் என்னோடிருக்கிறார். என்னால் முடியாது, அவரால்



முடியும் அவர் என்னோடிருக்கிறார். எனக்கு விருப்பமில்லை - அவருக் கு உண்டு. அவர் என்னோடிருக்கிறார். நான் இல்லை. அவர் இருந்தார். அவர் என்னோடிருந்தார். ஆனால் எரிந்து சாம்பலாகாத முட்செடி யிலிருந்து கற்றுக் கொண்ட இந்த நான்கு ஆவிக்குரிய இரகசியங் களை உங்கள் வாழ்க்கையிலும் செயல்படுத்தக் கற்றுக் கொள்ளு வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

## அத்தியாயம் 16

## வாதைகளும், அற்புதங்களும், விடுதலை செய்வதற்கான கோட்பாடுகளும்

இப்பொழுது யாத்திராகமப் புத்தகத்தில் கொடுக்கப்பட்ட விடுதலையின் கதையில் நம் கவனத்தைச் செலுத்த நான் விரும்புகிறேன். நான் முன்பாகத் தெரிந்துகொண்டபடி, விடுதலை என்ற வார்த்தை இரட்சிப்பு என்ற வார்த்தைக்கு ஒத்த பொருளுடையது. யாத்திராகமப் புத்தகத்தில் விடுதலை, தேவனுடைய மக்கள் அனுபவித்த இரட்சிப்பு என்ற பாடப்பொருளுக்கு வரும்போது நாம் தேவனுடைய வல்லமையைக் காண்கிறோம். ஏனென்றால், தேவனுடைய வல்லமையில்லாமல், கடந்த அல்லது நிகழ்கால இரட்சிப்பு என்று ஒன்றில்லை. யாத்திராகமப் புத்தகத்தில், பத்து வாதைகளும் மிகவும் தனிப்பட்ட முறையில் தேவனுடைய வல்லமையைக் காட்டின.

**வாதைகள்**

வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்திய விசேஷம் வரை போதிக்கப்பட்ட மிகப்பெரிய சத்தியத்தின் ஒரு சித்திரம் தான் பத்து வாதைகள் அளிக்கும் செய்தி. இந்தச் சத்தியம் 1 யோவான் 4:4-இல் இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது: ''உலகத்திலிருக் கிறவனும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.'' இதுவே பத்து வாதைக ளின் தியான செயல்படுத்துதலுக்கான செய்தி.

யாத்திராகமம் 5:1 -இல் மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலரை விடுதலை செய்யும்படி முதலாவதாக மன்றாடுகிறார்கள். ஆனால் பார் வோன் இகழ்ந்தான்.

எப்படியிருந்தாலும் அது ஒரு விதத்தில் வேடிக்கையாகத் தெரிந்தது மோசேயின் நோக்கம் என்ன என்று பார்வோனுக்கு விளங்கவில்லை. அவர்கள் கொடுத்த அடிப்படைக் காரணம் பார்வோனுக்கு ஒரு பொருட்டாகக் காணப்படவில்லை: ''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிட வேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள்''.

இந்தக் கதையில், பாவம் அல்லது தீமையின் சக்தியிலிருந்து ''விடுதலையின் கோட்பாடுகள்'' என்று நாம் அழைக்கக்கூடிய கோட்பாடுகளையும் நாம் காண்கிறோம். மோசே தேவனுடைய மக்களை விடுதலை செய்யும்படி உரிமையோடு கேட்கும்போது பார்வோன் அவர்களை விடுதலை செய்ய மறுக்கிறான், வாதைகள் வருகின்றன, வந்து கொண்டேயிருக்கின்றன. கடைசியில் இந்த வாதைகள் அவன் எண்ணத்தை மாற்றச் செய்கின்றன. சிறிது, சிறிதாகப் பார்வோன் தேவனுடைய வல்லமைக்கு இணங்கத் துவங்குகிறான். அப்படித்துவங்கும்போது, மோசேக்கும் பார்வோனுக்கும் இடையேயுள்ள பேச்சுவார்த்தைகளைக் கவனியுங்கள். மோசே, விடுதலையளிக்கும் இயேசு கிறிஸ்துவின் ஒரு சித்திரம் என்றும் பார்வோன் தீமையின் உருவகமான சாத்தானின் சித்திரம் என்றும், அநேகர் நம்புகின்றனர். மோசேக்கும் பார்வோனுக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தைப் புரிந்து கொள்ளும்போது, இன்று நம்முடைய விடுதலைக்காக அல்லது இரட்சிப்புக்காக இயேசு கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக யாத்திராகமம் 8:25-இல் இஸ்ரவேல் புத்திரர்களைத் தங்கள் தேவனுக்காக பலியிடும்படி அனுப்பவேண்டும் என்று மோசே அதிகாரத்தோடு கேட்டபொழுது, பார்வோன், ''உங்கள் தேவனுக்கு (எகிப்து) தேசத்திலேதானே பலியிடுங்கள், எகிப்தை விட்டுப் போகவேண்டாம்'' என்று சொல்லுகிறான்.

இன்னும் சில வாதைகளுக்குப் பின், பார்வோன் அவர்கள் மதச் சடங்குகளைச் செய்ய மக்களை விடுவதற்கு மறுபடியும் சம்மதிக்கிறான், ஆனால் சிறிது விட்டுக்கொடுத்து: ''ஆனாலும் நீங்கள் அதிக தூரமாய் போக வேண்டாம்'' என்கிறான் (28). இதுவும் புதிய



விசுவாசியின் மேல் எப்படி அழுத்தம் வருகிறது என்பதைப் பற்றிய ஒரு சித்திரமாயிருக்கிறது. ''நன்று, நீ ஒரு கிறிஸ்தவனாக வேண்டுமென்றால், அப்படியே செய், ஆனால் மனவைராக்கியமுள்ள ஒருவனாக மாறிவிட மாட்டாய் என்று நான் நம்புகிறேன், அதாவது இதைத் தீவிரமாய் எடுத்துக் கொள்ளும் அளவுக்குப் போகமாட்டாய் என்று நான் நம்புகிறேன்'' என்று சாத்தான் கூறுவது போலிருக்கிறது.

இன்னும் அதிக வாதைகளுக்குப்பின் 10:8-10 வரையுள்ள வசனங்களில் பார்வோன் இன்னும் கொஞ்சம் தளர்த்துகிறான். ''அப்படி வேண்டாம், புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்'' (11). அதாவது உங்கள் பிள்ளைகளை நீங்கள் கூட்டிக் கொண்டு போகக் கூடாது, என்று சொல்லுகிறான். நம்முடைய விசுவாசத்தில் நம்மோடு ஒத்துப் போக முடியாது என்று சாத்தான் கண்டு கொள்ளும் பொழுது, அவன் நம்முடைய பிள்ளைகளை எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறான். எத்தனை மக்கள் இப்படித் ''தங்கள் பிள்ளைகளை எகிப்தில்'' விட்டு விட்டு விசுவாசத்தினுள் வந்திருக்கிறார்கள் என்று காண்பது அதிசயமாயிருக்கிறது. இன்னும் அதிக வாதைகளுக்குப்பின் பார்வோன் நீங்கள் போகலாம், ஆனால் உங்கள் ஆடுகளும் மாடுகளும் எகிப்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று சொல்லுகிறான் (யாத்திராகமம் 10:24). இது சாத்தான் நாம் நம்முடைய செல்வங்களைக் நம்முடைய விசுவாசத்தினுள் கொண்டு வரக் கூடாது என்பது போலுள்ளது .

சாத்தானின் உருவகமான பார்வோனின் தந்திரங்களில் இது ஒன்று என்று நான் நம்புகிறேன். முதலாவது விடுதலை கோட்பாட்டில் கவனிக்க வேண்டியது சாத்தானோடு ஒருபோதும் சமரச முயற்சிகளை வைத்துக் கொள்ள வேண்டாம் என்பதே. எகிப்தில் (இந்த உலகத்தில்) உங்கள் பிள்ளைகளை விட்டுவிட அல்லது உங்கள் செல்வத்தை எகிப்தில் விட்டுவிடும்படி உங்களைச் சோதிக்கச் சாத்தானுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

**அற்புதங்கள்**

அநேக மக்களைப் போல நீங்களும் ஏறகெனவே பாவத்திற்குள்ளிருந்தால் அதை விட்டு வெளியே வருவதற்கு என்ன செய்யலாம்? யாத்திராகமம் நமக்குச் சொல்லுகிறது: பாவத்தின் கட்டுகளிலிருந்தும், கொடுமையிலிருந்தும் வெளியே வர ஒரு அதிசயம்

நிகழ வேண்டும். பஸ்காவிலும், செங்கடலைக் கடந்ததிலும் இந்த மாதிரியான அதிசயங்களை நாம் காண்கிறோம். இந்த அற்புதங்கள் இஸ்ரவேல் புத்திரர் பார்வோனிடமிருந்து இறுதியாக விடுதலைப் பெற்றதைக் குறிப்பிடுகின்றன.

கடைசி வாதை, தேவனுடைய கடுங்கோபத்தில் எகிப்தியரின் முதல் பேறான பிள்ளைகளின் உயிரை எடுத்தது. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களான அவர்கள் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும் போது, தேவனுடைய கடுங்கோபம் அவர்களைக் கடந்து செல்லுகிறது. பஸ்காவில் குறிப்பிட்டவைகளை நிறைவேற்றும் படி அவர் சீஷர்களிடம் சிலுவையின் மீது தம் மரணத்தைப் பற்றி சொல்லும் போது இயேசு இந்த பஸ்கா ஆசரிப்புக்கும் நம்முடைய இரட்சிப்புக்கும் உள்ள உறவைக் காட்டுகிறார் (லூக்கா 22:16)

மோசேக்கும் பார்வோனுக்குமிடையே நடந்த உரையாடல் முழுவதிலும், பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைப் போக விடமாட்டான் என்று உங்களுக்குத் தெரியும். பார்வோன் தன் மனதை மாற்றிக் கொண்டேயிருந்தான். ''நீங்கள் போகலாம்'' என்று அவன் சொல்லுகிறான், ஆனால் வாதைகள் குறைந்ததும், ''நீங்கள் போக முடியாது'', என்று சொல்லுவான். அவர்களை விடுதலை செய்த பின்பும் கூட, பார்வோனின் உள்ளத்தில் இன்னொரு மாற்றம் ஏற்பட்டது. செங்கடலுக்கு முன்பாக தேவனுடைய மக்கள் கூடியிருந்த போது, அவன் தன் படைகளைக் கூட்டினான், இது பார்வோன் அவர்களைக் கொல்லப் போவது போல் தோன்றுகிறது. நிச்சயமாக இஸ்ரவேல் புத்திரருக்கு இன்னொரு அற்புதம் நடைபெற வேண்டும்.

தேவன் என்ன செய்யச் சொல்லுகிறாரோ அதை மோசே செய்தான், கதையின் மீதிப்பகுதி உங்களுக்கு நன்றாகத் தெரியும். தண்ணீர் உயர்ந்த சுவர்களாகப் பிரிந்தது, இஸ்ரவேல் புத்திரர் அதன் நடுவே உலர்ந்த தரையில் கடந்து சென்றனர். எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரைப் பின் தொடர முயற்சித்த போது, தண்ணீர் சுவர்கள் உடைந்து விழுந்து எகிப்திய படைவீரர்களைத் தண்ணீரில் ஆழ்த்தியது (யாக்கோபு 14:21-28).

பழைய ஏற்பாட்டு அற்புதங்களைப் பார்க்கும் போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைக் குறித்து நம்ப



வேண்டுமா, வேண்டாமா என்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும். நான் இந்த அற்புதத்தை விசுவாசிக்கிறேன். அது எழுதப்பட்டபடியே இந்தக் கதை நம்முடைய இரட்சிப்பைக் குறிப்பிடுகிறது என்று நான் விசுவாசிக்கிறேன். உன்னை இரட்சிப்பதற்கு தேவன் ஒரு அற்புதம் செய்ய வேண்டும். என்னை இரட்சிப்பதற்கும் ஒரு அற்புதம் அவசியப்படுகிறது.

பஸ்கா பண்டிகையின் மற்றும் செங்கடலின் அற்புதங்கள் நமக்கு இதையை தெரிவிக்கின்றன.

இஸ்ரவேல் புத்திரர் செங்கடலைக் கடந்து வனாந்தரத்துக்கு வந்த பொழுது, அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய பிரச்சனை ஏற்பட்டது. ஒன்றுமில்லாத இந்த இடத்தில் அவர்கள் உண்பதற்கும், குடிப்பதற்கும் என்ன இருக்கிறது? ஏறக்குறைய இருபது அல்லது முப்பது லட்சம் மக்களுக்கு உணவும் தண்ணீரும் தேவைப்பட்டது. என்ன செய்ய வேண்டும் என்று மோசேக்குத் தெரியவில்லை. ஆனால் தேவனுக்குத் தெரியும்.

தேவன் இடைபட்டு, அவர்களுடைய தேவைகளை மற்றொரு அற்புதம் மூலமாகச் சந்திக்கிறார். ஒரு காலைவேளையில் அவர்கள் எழுந்ததும், நிலம் முழுவதிலும் வெண்மை நிறமான ஒரு பொருள் இருந்தது. அவர்கள் ''இது என்ன?'' என்றார்கள். இதற்கு நிகரான எபிரெய வார்த்தை ''மன்னா'' என்பதாகும், அவர்கள் அப்படியே அதை மன்னா என்றழைத்தார்கள். அப்பொழுதிலிருந்து ஒவ்வொரு நாள் காலையிலும் அது கிடைத்தது.

இஸ்ரவேல் புத்திரருக்குக் கிடைத்த ஆகாரம் நல்ல போஷாக்கு சத்துள்ளது, ஏனென்றால் இந்த உணவை உட்கொண்டு அவர்கள் நாற்பது ஆண்டுகள் திடமாயிருந்தனர். இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த ஏற்பாடு உங்களுக்கும் எனக்கும் தேவையான மற்றொரு அற்புதத்தைச் சுட்டிக் காட்டுகிறது - ஜீவனாம்சம். யார் அல்லது எது உங்களுக்கு ஜீவனாம்சத்தின் ஆதாரம்? உங்களுக்குத் தேவை யானவைகள் கிடைக்க, தேசத்தின் பொருளாதாரத்தை நம்புகிறீர்களா? நமக்குத் தேவையான எல்லாவற்றிற்கும் ஆதாரம் தேவன். நாம் அவரை நோக்கிப் பார்க்கும்போது, நமக்கு தேவையானவைகளை தேவையான நேரத்தில் கொடுக்கிறார்.

நாம் ஜெபிக்கும்போது, ''எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்று எங்களுக்குத் தாரும்'' என்று நம் பரமபிதாவை கேட்கவேண்டும் என்பது மன்னாவை ஒவ்வொரு நாளும் சேகரிக்க வேண்டும் என்பதைப்பற்றிய இயேசுவினுடைய கட்டளையைக் குறிப்பிடுவதாக இருக்கிறது. உணவு உண்பதற்கு முன் நம்முடைய உணவுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தும்போது, நம்முடைய உணவுக்கும் நமக்கு வேண்டிய எல்லாவற்றிற்கும் மூலகாரணர் தேவன் என்பதை ஒத்துக் கொள்ளுகிறோம். வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் அலைந்து திரிந்த இஸ்ரவேல் புத்திரருக்கான தேவனுடைய ஏற்பாடு பற்றிய உண்மையை நமக்கு நினை வூட்டுகிறது.

**நம்முடைய விடுதலை**

யாத்திராகமத்தில், நம்முடைய இரட்சிப்பின் அடிப்படையையும், ஆராதனை செய்வதின் மிக முக்கிய முறையையும் கூட நாம் கண்டு கொள்ளுகிறோம். ஒரு ஆட்டுக்குட்டியைப் பலியிட்டு அதன் இரத்தத்தைக் கதவு சட்டத்தின் மேலும் இரண்டு பக்கங்களிலும் தெளிக்க வேண்டுமென்று தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு கட்டளையிட்டார்; இது தேவனுடைய கடுங்கோபம் நமக்கு மேலாகக் கடந்து செல்ல, தேவ ஆட்டுக்குட்டியான இயேசு நமக்காகப் பலியிடப்பட்டார், நம்மை இரட்சிப்பது அவருடைய இரத்தம். பஸ்கா ஆட்டுக்குட்டி குறிப்பிடுவது தேவ ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவையே.

யாத்திராகமப் புத்தகத்தை நீங்கள் கன்று அறிந்து கொள்ள வேண்டும் என்பது என் ஜெபமாயிருக்கிறது.

## அத்தியாயம் 16

## பத்துக் கற்பனைகளின் உட்கருத்து

யாத்திராகமம் 20:1-17 வசனங்களில் பட்டியலிடப்பட்ட பத்துக் கற்பனைகள் வழியாகச் செல்ல நான் விரும்புகிறேன். இந்தப் பத்துக் கற்பனைகளும் இன்னும் அதிகக் குறிப்பாகச் சொல்லும் நூற்றுக் கணக்கான கட்டளைகளின் உட்கருத்தை சுருக்கமாகச் சொல்லுகின்றன.



பத்துக் கற்பனைகள் இரண்டு கற்பலகைகளின் எழுதப் பட்டிருந்தன. ஒரு கற்பலகையில் நான்கு கற்பனைகள் எழுதப் பட்டிருந்தன, இவைகளெல்லாம் தேவனோடு நமக்குள்ள உறவைப் பற்றியவை:

1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
2. யாதொரு விக்கிரகத்தையும் வணங்காதிருப்பாயாக
3. என்னுடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக
4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

இந்த நான்கு கற்பனைகளும் தேவனோடு நமக்குள் உறவைப் பற்றியவை.

இரண்டாவது கற்பலகையில் ஆறு கற்பனைகளிருந்தன, இவை மக்களோடு நமக்குள்ள உறவைத் தழுவியவை:

5. உன் தாயையும் தகப்பனையும் கனம் பண்ணுவாயாக.
6. கொலை செய்யாதிருப்பாயாக.
7. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக
8. களவு செய்யாதிருப்பாயாக
9. பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக
10. மற்றவர் பொருளை இச்சியாதிருப்பாயாக.

இவைகளின் உண்மையான அர்த்தம் என்ன என்று காண்பதற்கு, இந்தப் பத்து கற்னைகளையும் ஆராய்ந்து பார்ப்போம்

முதலாவது கற்பனை, ''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்'' என்று சொல்லுகிறது. வேதாகமத்தின் உண்மைகள் முக்கியமாக இரண்டு வார்த்தை களுக்குள் அடங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ''தேவனுக்கு முதலிடம்.'' இதுவே முதலாம் கற்பனையின் உட்கருத்து அல்லது சாராம்சம்.

இரண்டாவது கற்பனை, ''மேலே வானத்திலும், கீழே பூமியிலும் காணப்படும் எவைகளுக்கும் ஒப்பான செதுக்கப்பட்ட விக்கிரகங் களை 'கடவுள்' என்றழைப்பதைத் தடை செய்கிறது. சொல்லப் போனால் இந்தக் கற்பனையின் உட்கருத்து இதைப் போன்றது: தேவன் ஒரு ஆவியானவர்; விசுவாசத்தோடு தேவனிடத்தில் வர

வேண்டும், என்று நாம் கட்டளை பெற்றிருக்கிறோம். தேவன் ஆவியாயிருப்பதால் நாம் வணங்கு பவரைப் பார்க்க முடியாது. நாம் தேவனை அணுகுவதற்கும், அவரோடு நமக்குள்ள உறவுக்கும் இதுதான் வழி என்று அவர் தீர்மானித்திருக்கிறார். நாம் அவரிடம் விசுவாசத்துடன் வரவேண்டும் என்று விரும்புகிறார். திடப் பொருளாலான அல்லது தொட்டு உணரக் கூடியதான ஒன்று தேவனைக் குறிக்கிறது என்று சொல்ல நாம் முயற்சித்தால், விசுவாசம் தேவை என்பதைத் தவிர்த்துவிடுகிறோம்.

மூன்றாவது கற்பனை, அவருடைய நாமத்தை நாம் வீணில் வழங்கக் கூடாது என்பது. இது அடிப்படையில் தேவனை நிந்திக்கக் கூடாது என்று கூறுகிறது. அநேக மக்கள் நினைத்துக் கொண்டாலும், இந்தக் கற்பனியன் சாராம்சம் அதைவிட விரிவானது. உண்மையில் அது இப்படிப் பொருள் உடையது. தேவனுடைய பெயரை நீங்கள் எப்போது உச்சரித்தாலும் அது ஆராதிக்கும் சமயமானாலும் – நீங்கள் தேவன் யார் என்று உணராமல் அவருடைய பெயரை வீணுகப் பயன்படுத்தக் கூடாது. ஆராதிக்கும் போதும், கவலையீனமாக யோசனையில்லாமல் அல்லது மதிப்புக் கொடுக்காமல் அவர் நாமத்தை உச்சரிக்கக் கூடாது.

நான்காவது கற்பனை ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டும் என்று சொல்லுகிறது. பிரமாணப் புத்தங்களிலுள்ள நூற்றுக் கணக்காகக் கட்டளைகளில் இதற்கு அநேக செயல்பாடுகள் இருக்கின்றன. இந்தக் கற்பனையி லிருந்து யூதர்களுடைய அநேக நிபந்தனைகள் தோன்றின, எனினும் இதன் தத்துவம் முதல் கற்பனைக்கு ஒப்பானது: உங்கள் வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள். அவருக்காக நேரம் ஒதுக்குங்கள். ஓய்வு நாள் தத்துவத்தின் இன்னொரு பிரயோகம் ஓய்வு எடுப்பது. நான்காவது கற்பனையின் கருத்தை மக்கள் மீறியதால், தொற்று நோய் தோன்றி பரவுவதும் மறைவது மாயிருக்கிறது.

ஐந்தாவது கற்பனை நம்முடைய பெற்றோர்களைக் கனம் பண்ண வேண்டும் என்று சொல்லுகிறது. இந்தக் கற்பனை ஒன்று தான் ஒரு வாக்குத்தத்தத்தைக் கொண்டது: உங்கள் தாயையும் தந்தை யையும் கனம் செய்யும் போது உங்கள் ஆயுசு நீடித்திருக்கும் (12). இந்தக் கற்பனை பெற்றோரைக் கனம் பண்ணுவதைக் குறித்தது என்பதைக் கவனியுங்கள். பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக்



கீழ்ப்படிய வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது. பிள்ளைகளா யிருக்கும் போது நீங்கள் கீழ்ப்படிகிறீர்கள். எனினும் இந்தக் கற்பனை பெரியவர்களைப் பற்றியது, அது தகப்பனார்களுக்கும் தாய்மார் களுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறது. இது முக்கியமானது என்பதற்கு ஒரு காரணம், உங்கள் பிள்ளைகள் எப்படி உங்களைக் கனம் பண்ண வேண்டும் என்று காட்டுகிறது.

அடுத்த கற்பனை நாம் கொலை செய்யக் கூடாது என்று தெரிவிக்கிறது. இந்தக் கற்பனையிள் உட்கருத்து உயிர் தேவனுடைய கைகளில் இருக்கிறது; தேவன் உயிரைக் கொடுக்கிறார், அதை எடுத்துக் கொள்ளும் தனிப்பட்ட உரிமை தேவனுடையதாயிருக்க வேண்டும்.

ஏழாவது கற்பனை, விபசாரம் செய்யாதிருப்பாயாக என்று நமக்குச் சொல்லுகிறது. இந்தக் கற்பனையின் உட்கருத்து ‘‘பிள்ளைகளின் உரிமை’’ என்று நாம் அழைக்கக் கூடியதாயிருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆதியாகமம் 2ல் குறிப்பிட்டபடி, இரண்டு நபர்களை எடுத்து அவர்களை வாழ்க்கைத் துணைவர்களாக்கி, அதனால் அவர்களைப் பெற்றோராக்கி மக்களைப் பிறப்பித்து, அவர்களும் வாழ்க்கைத் துணைவர்களாகவும் பெற்றோர்களாகவும் ஆக வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். பிள்ளைகளை நன்கு வளர்த்து வாழக்கையைச் சந்திக்க ஆயத்தப்படுத்த தேவன் விரும்புகிறார். இதற்கு திருமண உறவே பாதுகாப்பான அமைப்பு. இதனால் பிள்ளைகளின் பாதுகாப்பு, திருமணம் செய்து கொண்ட தம்பதிகளின் அர்ப்பணிப்பு அல்லது விசுவாசத்துடனிடருப்பதைப் பொருத்திருக்கிறது. ‘‘விபசாரம் செய்யாதிருப்பாக’’ என்று தேவன் கட்டளையிடும் போது அவர் குடும்பங்களையும் பிள்ளைகளையும் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.

எட்டாவது கற்பனை, ‘‘களவு செய்யாதிருப்பாயாக’’ என்பது. இந்தக் கற்பனையின் உட்கருத்து, தேவன் ஒழுங்குக்குத் தேவனா யிருக்கிறார் என்பது. அவருடைய கிருபையின் அடிப்படையில், நாம் விதைத்தது அறுவடை செய்யும் பொழுது, வாழ்க்கையில் குறிப்பிட்ட சம்பத்துக்களை நாம் சிறிது சிறிதாக விருத்தி செய்கிறோம். நீங்கள் திருடும் போது தேவன் கருதிய ஒழுங்கை சீர்குலைக்கிறீர்கள். இதுவே இந்தக் கற்பைனையின் உட்கருத்தாகும்.

ஒன்பதாவது கற்பனை, பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக'' என்பதாகும். அநேக மக்கள் நன்கு கவனித்துப் பார்க்காத ஒரு கற்பனை இது என்று நான் நினைக்கிறேன். நாம் பெரிய பொய் சிறிய பொய், வெள்ளைப் பொய், கருப்புப் பொய் என்று பலவிதங்களில் உண்மையல்லாதவற்றைக் கூறுகிறோம். பொய் சொல்லுவதில் புத்திசாலித்தனமான வழிகளில் ஒன்று, உண்மையைச் சந்தர்ப்ப மல்லாத போது சொல்லுவது அல்லது உண்மையின் ஒரு பகுதியை மட்டும் சொல்லுவது. ஒருவரது குணத்தைப்பற்றி மோசமாக கூறி அவர்களை அழிக்க விரும்பும்போது, இதில் அவர்கள் வல்லுநர்கள் ஆகி விடுகின்றனர். எனினும் இந்தக் கற்பனை ''பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக'' என்று சொல்லும் பொழுது, இவை எல்லா வற்றையும் கடந்து செல்லுகிறது. நீங்கள் எவ்வளவு தான் புத்திசாலித் தனமாகச் செய்தாலும் அதைப் பற்றிக் கவலையில்லை. சிறியதோ, பெரியதோ, தெரிந்ததோ, தெரியாததோ ஒரு தவறான அபிப் பிராயத்தை நீங்கள் கொடுப்பீர்களானால், நீங்கள் ஒன்பதாவது கற்பனையை மீறி விட்டீர்கள். ஒன்பதாவது கற்பனையின் உட்கருத்து, உண்மையைப் பேசு என்பதாகும்.

கடைசிக் கற்பனை நாம் இச்சிக்கக் கூடாது என்று சொல்லுகிறது. இதன் உட்கருத்து ''களவு செய்யாதிருப்பாயாக'' என்ற எட்டாவது கற்பனையின் உட்கருத்துக்கு ஒத்தக் கருத்து. நமக்கு என்ன கொடுத்திருக்கிறார் என்பது தேவனுக்குத் தெரியும். நமக்கிருக்கும் துணை, நமக்கிருக்கும் குடும்பம், வீடு, பதவி வாழ்க்கையில் நாம் வகிக்கும் முழு இடம் ஆகியவற்றைப் பற்றிய ஒரு திட்டம் - சித்தம் - இருக்கிறது. வேத வசனங்களின் படி, நாம் மற்றவர்களோடு நம்மை ஒப்பிட்டுப்பார்க்கக் கூடாது. நாம் எல்லாரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். தேவன் உன்னை உருவாக்கியபோதும் என்னை உருவாக்கியபோதும், அது முடிந்ததும் அவர் அந்த உருவமைப்பை எறிந்து விடுகிறார். நாம் மற்றொருவரைப் போலிருக்க வேண்டும் என்று அவர் விரும்பவில்லை.

வேறு யாரும் நம்மைப் போலிருப்பதும் அவருக்கு விருப்ப மில்லை. அப்படியானால் நாம் மற்றவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. நாம் மற்றவர்கள் மேல் பொறாமை கொள்ளவோ மற்றவர்களிடமிருக்கும் பொருளை இச்சிப்பதோ கூடாது. பொறா மையும், இச்சித்தலும் நம்முடைய வாழ்வில் நமக்கான தேவனுடைய சித்தத்தினால் நாம் திருப்தியடையவில்லை என்று காட்டுகிறது. இதுவே பத்தாவது கற்பனையின் உட்கருத்து என்று நான் நம்புகிறேன்.